# தென்மர்
Thenmar

தென்மராட்சி மண்ணுக்கு மாண்பேற்றும் திங்கள் இதழ்

02

ஐப்பசி 2021




தென்மராட்சி கிராமங்களின் காரணப் பெயர்கள்

02



நோர்வே அரசியல் நாயகி ஹம்சி ஒரு வரலாற்று சாதனை!

03



கோடிகளைத் தாண்டும் உதவிகள் மனம் திறக்கிறார் ஆசிரியர் சிவராஜா

06



இரும்புக் கட்டுமான இளந்தொழில் முனைவர்

07





கைதடியில் மக்கள் நலன்பேணும் நட்புறவு கழகம் ஒக். 17இல் நடத்திய தென்மர் அறிமுக விழா காட்சிகள் .....







பாரிஸில் செப். 26இல் தென்மர் வெளியீடு காட்சிகள்.....

# ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தென்மராட்சியின் குரல்!

## நோர்வே தேர்தலில் ஹம்சி வெற்றி பெற்று சாதனை!



நோர்வே நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட தென்மராட்சி கைதடியை பூர்வீகமாக கொண்ட செல்வி ஹம்சாயினி குணரத்தினம் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட செய்தியை பகிர்ந்து கொள்வதில் தென்மர் பெருமையடைகிறது. 3 வயதில் பெற்றோருடன் நோர்வே சென்ற ஹம்சி பாடசாலை காலத்திலே அரசியலில் ஈடுபட்டார். தமிழ் இளையோர் அமைப்பில் இயங்கியவர் நோர்வே தொழிற் கட்சியில் இணைந்து பணியாற்றியதன் மூலம் அனைவரது கவனத்தையும் ஈர்த்தார்.

07

# பெண் தலைமைத்துவம்; வாழ்வாதாரம் மேம்படும்



பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவி செய்வதன் மூலம் வாழ்வாதரரம் மேம்படும்.

இயல்பாகவே கணவர், பிள்ளைகள் என குடும்ப உறுப்பினர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வைப்பவர் பெண் அதனால் தான் குடும்ப குத்து விளக்கு, குலதெய்வம் என்றெல்லாம் தமிழ் சமூகம் அவர்களை கொண்டாடுகிறது. தாயகத்தில் பொருளாதாரத்தில் பின்னடைவில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களை அடையாளம் கண்டு உதவும் போது வாழ்வாதாரம் உயர்தப்படும் இவ்வாறு பிரான்ஸ் பாரிஸ் நகரில் இடம்பெற்ற தென்மராட்சி சர்வதேச ஒன்றிய வெளியீடான தென்மர் பத்திரிகையின் அறிமுக நிகழ்வுக்கு தலைமை வகித்து உரையாற்றிய ஒன்றிய உப தலைவரும், சமூக செயற்பாட்டாளருமான திரு. செ. முகுந்தராஜா தெரிவித்தார்.

ஒன்றியத்தின் ஊடக இணைப்பாளர் க. சுபாஸ், தென்மர் ஆலோசகர் கு. உதயகுமார்

07


**Chavakachcheri Kannadippiddy electrical cemetry project**

*Bank- People's Bank Chavakachcheri*
*Ac.No-110-2-001-7-0008145*

Account open members

1)Mr.Sivabalan Namasivayam
member of the Chamber of commerce

2)Mrs.Sivamankai Ramanathan
Chairman urban Council Chavakachcheri

3)Mrs.Devarathy Sutheskaran
Deputy principal Drieberg College
Member of the International federation of Thenmaradchy foundation.


# சாவகச்சேரி மின்மயானம்; உதவி கோரும் நகராட்சி



தற்போது நிலவும் covid 19 அசாதாரண சூழ்நிலை காரணமாக மரணிப்வர்களின் உடல்களை பாதுகாப்பான முறையில் தகனம் செய்யும் முறைமை எமது பிரதேசத்தில் காணப்படாத தால் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் கண்ணாடி பிட்டி இந்து மயானத்தில் மின்தகன சுடலை அமைக்க

07

# தென்மராட்சி கிராமங்களின் காரணப் பெயர்கள்



செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

**எருதிடல்**

கைதடிக் கிராமத்தை அண்டியுள்ள பிரதேசம் எரு + திடல் = எருத்திடல் இது காலப்போக்கில் மருவி எருதிடலாக மாறியிருக்கலாம்

**மானாவளை**

மணல் வளை என்ற பெயர் மருவி மானாவளை ஆகியிருக்க வேண்டும். யாழ்ப்பாணத்தை குறிப்பதற்கு முன்னாளில் 'மணற்றி' என்ற பெயரைப் பயன்படுத்தினர். மணற்காடு, மண்டாள் என்ற பெயர்களும் மணலுடன் தொடர்புடையவை ஆகும்.

வள் என்பது வளம் என்ற பொருளைத் தருகிறது. வள் + ஐ = வளை. அதாவது வளம் உள்ள இடம் என்ற பொருளை இது தருகிறது. மணல் வளமுள்ள இடம் ஆதலால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**கோவிலாக்கண்டி**

கண்டி என்பது மீன்பிடிக்கும் ஒரு பொறிமுறை கண்டி என்பதற்கு மந்தை, உருத்திராக்கமாலை 75 ஏக்கர் நிலப் பரப்பு என்றவாறு பல பொருள்கள் கொள்ளப்படுகின்றன.

தென்மராட்சியில் நாவற்குழியை அடுத்து இந்த ஊர் உள்ளது. (கோ + இலா + கண்டி) எனவும் கோவில் + ஆர் + கண்டி எனவும் அதனை பிரித்து பொருள் கொள்வர்.

ஆர் என்பது உரிச்சொல். மிகுதியான என்ற பொருளை இது கொடுக்கும். அதிகளவு கோவில்களைக் கொண்ட ஒரு தொகுதி நிலப்பரப்பு என்ற பொருளில் கோவிலாகக்கண்டி என்ற பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

**கொடிகாமம்**

தென்மராட்சியில் உள்ள முக்கிய இடங்களுள் ஒன்று. இங்கு பெருமளவு கமம் செய்யப்பட்டிருக்கக் கூடிய சூழலில் கோடிகமம் என்பதே கொடிகாமம் ஆகியிருக்க வேண்டும்.

கோஷ்டியாகக் கமம் செய்த காரணத்தால் கோஷ் டிகாமம் கொடிகாமம் ஆயிற்று என்றவாறான ஒரு கருத்தையும் எழுதியுள்ளனர்.

பனஞ் சோலைகளும் அவற்றைச் சார்ந்து வளர்ந்த பெருங்கொடிப் பற்றைகளும் இருப்பதால் கொடிகமம் என்பது கொடிகாமம் என ஆயிற்று எனவும் கொள்ளலாம்.

கொடிப்பாலைச் செடி பெருமளவில் காணப்பட்ட மையால் இப்பெயர் ஏற்பட்டதாகவும் கொள்வர்.

தமிழகத்தில் கொடிவயல் என்ற இடப் பெயர் இதனுடன் ஒட்டி நோக்கத்தக்கது.

கோடி + அகம் (கிழக்கு ஊர்) கோடி - கிழக்கு எனப் பொருள்படும். தமிழ்நாட்டில் கோடிக்கரை என் பது கிழக்குக் கரையைக் குறிக்கிறது. எனவே கிழக்கு ஊர் எனவும் கருதலாம்.

**கும்பாவெளி**

வெளி என்றால் புறம் அல்லது மைதானம் என்ற பொருள் கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பில் பேச்சு வழக்கில் வெளி என்பது வயல் குளத்தைக் குறிக்கிறது.

மத்துவில் பகுதியில் உள்ள ஓர் ஊரே கும்பாவெளி (கும்பல் = நிறைவு, வெளி = வயல் நிலம்) நிறைந்த வயல் நிலம் என்ற பொருளில் கும்பாவெளி அமைந்துள்ளது.

**சம்பாவெளி**

இது உசன் பகுதியில் உள்ள ஊர் சம்பா வகை நெல் விளைவிக்கப்பட்டையால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். கரம்பகம்

உசன் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள இடம். கரம்பை என்றால் வண்டல் மண் பரந்த பூமி என பொருள்படும். எனவே வயற் செய்கைக்கு ஏற்ற நிலமாக அமைந்தமையால் கரம்பகம் என்ற பெயரைப்பெற்றிருக்கலாம். இந்த ஊருக்கு அண்மையில் சின்னக்கரம்பகம் என்றோர் ஊர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**சரசாலை**

ஆலை என்பது நீர் வழிந்தோடும் சிறு வாய்க்கால். ஆலயம், சோலை, குடியிருந்திடம் எனப் பொருள்படும். ஆலை என்ற ஈற்றைக் கொண்ட பல ஊர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ளன.

ஆலை என்பது ஆலைமரம் எனவும், ஆலயம் எனவும் (ஏழாலை - ஏழு ஆலயம் உள்ள ஊர்) பொருள் கொள்வோர் உள்ளனர்.

(மிகுதி அடுத்த இதழில்...)




தென்மர்
Thenmar

தாயகம் - புகலிடம்
உறவுப்பாலம்

வெளியீடு :
தென்மராட்சி நிறுவனங்களின்
சர்வதேச ஒன்றியம்

முகவரி :
50 Rue du Mont Cenis
75018 Paris
France

மின்னஞ்சல் :
thenmar66gmail.com

தொலைபேசி இல:
0033 6 50 65 05 11
0033 6 11 14 03 43
001 41 65 59 57 93

ஆசிரிய பீடம்

ஊடக இணைப்பாளர்
க. சுபாஸ்

பிரதம ஆசிரியர்
என். கே. துரைசிங்கம்

ஆசிரியர் குழு
- மு. செல்வராணி
- வி. சிவராஜா
- என். கமலாகரன்
- ஆர். சத்தியசீலன்

ஆலோசகர்கள்
- க. அருந்தவராசா
- ச.லலீசன்
- கு. உதயகுமார்
- வி. திவ்வியராஜன்





# தென்மர்

## நமது கருத்து

### சாவகச்சேரி மின்தகனசாலை

கொரோனா மரணங்கள் மலிந்து போனதால் அதில் பலியாவோரின் உடல்களை முறைப்படி தகனம் செய்வதற்கு எமது மண்ணிலுள்ள சுடலைகள் போதுமானதாக, தரமானதாக இல்லை இதனால் மின்சுடலையின் தேவை தற்பொழுது எழுந்துள்ளது. வடக்கில் கிளிநொச்சி, சாவகச்சேரி, வலிகாமம் வடக்கு, வலி.கிழக்கு ஆகிய நான்கு பகுதிகளில் இத்தகைய மயானங்களை அமைப்பதற்கு அரசாங்க அனுமதி கிடைத்துள்ளது. ஆனால் இதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக மௌனம் நிலவுகிறது.

ஒரு மின் மயானம் தோற்றுவிக்க ரூபா 2 கோடி 40 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.நான்கு மயானங்களையும் உடனடியாக செய்வதற்கான பெருந்தொகையான நிதி தேவைப்படும் அதனால் அனுமதி கிடைத்தும். நிதியின்றி இவ் விடயத்தில் தடங்கல் ஏற்படுமா? என்று அங்கலாய்ப்பதை விட சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகள் தற்துணிவாக செயல்படவேண்டும்.

இதற்கான முன்முயற்சியில் சாவகச்சேரி நகராட்சி மன்றம் அடியெடுத்து வைத்திருப்பதை தென்மர் குழுமம் பாராட்டுகிறது, ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறது.தென்மராட்சி புலம்பெயர் வாழ் உறவுகளிடம் இதற்கான உதவியை வழங்குமாறு உரிமையுடன் கோரியுள்ளது. இந்த திட்டத்துக்காக வங்கி கணக்கு திறக்கப்பட்டுள்ளது.

அதில் சேமிக்கப்படும் பணம் மயான தேவைக்குசமனாககிடைத்தபின்வேலையை ஆரம்பிக்கவுள்ளனர். தென்மராட்சி சர்வதேச ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் நிறுவனங்கள் அனைத்துமே உவந்து உங்கள் பங்களிப்புகளை நல்குமாறு ஒன்றிய தலைவர் திரு.வி.சு. துரைராசா கனடாவில் இருந்து வேண்டுகோள் விடுத்துள்ளார் .

மதிப்பிடப்பட்டுள்ள தொகையில் அரைவாசி நிதியை ரூபா 1கோடியே 30 லட்சம் மட்டுமே புலம்பெயர் நாடுகளில் வதியும் எம்வரிடமிருந்து நகராட்சி மன்றம் எதிர்பார்க்கிறது.

இயந்திர சாதனங்களுக்கு மட்டுமே இந்நிதி போதுமானது கட்டுமானம் மற்றும் தேவைகளை நகராட்சி மன்றமே செய்து முடிக்கும் என கூறப்படுகிறது. மின்தகனசாலை விரைவில் அமைய எல்லோரும் இணைந்து கைகொடுப்போம்.

நாங்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது வேர்கள் தாயகத்தில் தான் இருக்கின்றன என்ற உணர்வில் தாயக செயற்பாடுகளுக்கு உதவுகின்ற நாம் மின் மயானத்தின் அவசியத்தை உணர்ந்து உதவுவோம் இதனை நாம் செய்யாது போனால் யார் செய்வது என்பதனை சிந்தனையில் கொள்வோம்.

தென்மரின் விருத்தி - தாயகத்தின் மலர்ச்சி

# நோர்வே அரசியல் நாயகி ஹம்சி ஒரு வரலாற்று சாதனை!

நோர்வே 2021 நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஹம்சி குணரத்தினம் நோர்வே உட்பட தமிழ்பேசும் நல் உலகெங்கும் பேசுபொருளாகி விட்டார். அவரது சாதனை, மதிநுட்பம்,தலைமைத்துவம் என அனைத்து சிறப்புகளுமே விதந்துரைக்கப்படுகிறது.தமிழ் பெண் ஒரு அந்நிய மண்ணில் இந்த உயரத்திற்கு வந்தார் என ஆச்சரிய படுகிறார்கள். யுத்த அரக்கன் தாயகத்திலிருந்து கலைத்தவர்கள் வரிசையில் பெற்றோருடன் நோர்வேயில் தஞ்சமடைந்த ஹம்சாவே இந்த சாதனைப் பெண்.

பாடசாலை காலத்திலே இளையோர் அமைப்பு,தொழிற்கட்சி போன்றவற்றுடன் தொடர்பை ஏற்படுத்தி அவற்றின் அரசியல் பட்டறிவை பெற்றார். 2007 செப்.10 ஒஸ்லோ மாநகர சபை பிரதிநிதியாக தெரிவான போது தமிழர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

பல ஆர்வலர்கள், கவிதைகளாலும், எழுத்துகளாலும் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

**நம்புகிறேன் மகளே**
**உனக்கு**
**எதிர்காலம் இருக்கிறது**
**இன்னும் இன்னும்**
**உயரத்தில் பறப்பாய்**
**விரித்துக்கொள் உன் சிறகுகளை**
**உனது வெற்றி**
**எங்கள் குழந்தைகளுக்கு**
**புதிய பாதை அமைத்துள்ளது**
**மகளே!**
**வீடுகள் தோறும்**
**உன்னை கொண்டாடுகிறோம்.**
**சாதனைப்பெண்ணே**
**மென்மேலும் சாதிக்க வேணும்**
**நம்புகிறேன் அது**
**நிச்சயமாகும்**


- என்றவாறு அன்று ஆர்வலர் ஒருவர் ஆருடம் கூறினார். அந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் உண்மையாகி விட்டது.

ஒஸ்லோ மாநகர சபை பிரதிநிதி ,பிரதி மேயர் என்று உயர்ந்தவர். நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர் இன்று நாளை மந்திரி சபையில் அவர் அமர்வதற்கான கதவுகள் திறந்தேயிருக்கின்றன.

ஹம்சி ஒரு அரசியலாளர் மட்டுமல்ல கவிஞர், கலைஞர், எழுத்தாளர் என பன்முகம் உடையவர். 3வயதிலிருந்து அரசியல் களம் வரை வந்ததன் வரலாற்றை நோர்வே மொழியில்எழுதிவெளியிட்டுள்ளார்.நோர்வே பிரபல பதிப்பகம் ஒன்று இதனை வெளியிட்டுள்ளது.இதுவரை இரண்டாம் பதிப்பை கண்ட இந்நூல் மூன்றாம் பதிப்புக்கு தயாராகிறது.பாடசாலை காலம், அரசியல், குடும்பம் என வெளிப்படை தன்மையுடன் நூலை எழுதியுள்ளார்.

மகாத்மா காந்தியின் சத்தியசோதனை போல் நூல் அமைந்துள்ளதாக முழுவதையும் வாசித்தவர்களில் ஒருவர் கூறினார். 2006 இலும் ஹம்சி கவனிக்கப்படாத வைரம் **( Diamond undiscovered)** என்ற கவிதை நூலை எழுதினார். அத்துடன் தனது கவி வரிகளை இசை பாடல்களாக ஒலிப் பேழைகளை வெளியிட்டதன். மூலம் தான் கலைகளில் ஈடுபாடுமிக்கவர் என்பதை நிரூபித்தார்.

ஹம்சி தனது முதற்கவிதையை கவனிக்கப்படாத வைரம் நூலில் பதிவு செய்துள்ளார்.




**ஒரு வாழ்கையில் ஒரு கடமை உண்டு**
**அந்த கடமையில் ஒரு செயல் உண்டு**
**அந்த செயலில் ஓர் அழகு உண்டு**
**அந்த அழகில் ஒரு வர்ணம் உண்டு**
**அந்த வர்ணத்தில் ஒரு கனவு உண்டு**
**அந்த கனவில் ஒரு விழிப்பு உண்டு**
**அந்த விழிப்பில் எம் நாடு உண்டு**
**அந்த நாட்டில் நாம் உண்டா?**

தேர்தல் வெற்றியின் பின் செப் 26 மெய்நிகர் வழியாக ஊடக சந்திப்பை நடத்தினார்.

பாலசிங்கம் யோகராஜா நிகழ்வை நெறிப்படுத்தினார் ஒவ்வொரு வினாவுக்கும் காத்திரமான பதில்களை அவர் வழங்கினார். பாரதி கண்ட புதுமைப்பெண்ணாக அவரது ஆற்றலையும் அறிவையும் ஊடக சந்திப்பு நிரூபித்தது. ஹம்சியின் தேர்தல் வெற்றி நோர்வே தமிழரின் நன்மதிப்பையும், அடையாளத்தையும் மேலும் பன்மடங்காக அதிகரிக்கும். 4 வருடங்களுக்கு நோர்வே வாழ் மக்களின் அரசியல், பொருளாதாரம், நீதி,சமூக ரீதியிலான முடிவுகளை, தீர்மானங்களை நடைமுறைபடுத்துவதற்கான உயர்பீடத்தில் ஒரு தமிழரும் அங்கம் வகிப்பது தமிழர்களுக்கு நம்பிக்கை தரும் செய்தியாகும் என முகநூல் பக்கத்தில் கருத்திடப்பட்டுள்ளது.

அதிக ஆளுமையாலும், ஆற்றலாலும் பலம் பொருந்திய சக வேட்பாளர்களை பின்தள்ளி ஒரு சக்திமிக்க அரசியல் இயக்கத்தின் பிரதம வேட்பாளருக்கு அடுத்த நிலையில் தன்னை முன் நிறுத்தியுள்ளார்.

ஹம்சி எதிர் விமர்சனங்கள் எதற்கும் அஞ்சாதவர் அரசியலில் அவரது உயரத்தை கண்டு சகித்துக்கொள்ள முடியாதவர்களே அவரைப்பற்றி தவறான கருத்துகளை வெளியிடுவர். இந்த புனைவுகளும், கட்டுக்கதைகள் எதிர்காலத்தில் எடுபடாது என்பதனை புரிந்துகொள்ள வேண்டும். அவரிடம் மனத் தைரியம் மட்டுமல்ல உடல் தைரியமும் நிறைந்து காணப்படுகிறது.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒரு தாக்குதல் சம்பவத்தில் சிக்கி மயிரிழையில் உயிர்தப்பியவர். நோர்வேயின் உத்தாயா **(utaya)** தீவில் தொழிற்கட்சி இளைஞர் அணியின் விடுமுறை கால முகாமில் இடம்பெற்ற கூட்டு படுகொலையில் 69 பேர் கொல்லப்பட்டனர்.அங்கிருந்த ஹம்சி உட்பட சிலர் உயிர்பிழைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் பாடசாலைகள்!


பேராதனைப் பல்கலைக்கழகம்

தொகுப்பு-
**வைரமுத்து சிவராசா**
**ஜேர்மனி**

ஒரு சமூகத்தின் ஒரு நாட்டின் மன உயிர் நாடியாக இருப்பதுடன் மனிதவள மேம்பாட்டுக்குக் கல்விதான் அடிப்படைக்காரணம் என்பது உண்மையான விடையமாகும். மனிதனின் அத்தியாவசிய தேவைகளான உணவு, நீர், உடை, சுகாதாரம், இருப்பிடம் முக்கிய இடங்களை வகித்தாலும் மனிதன் மனிதனாக வாழ கல்வி அடுத்த இடத்தில் உள்ளது. இது உணரப்பட்டே உலகம் முழுவதும் கல்விக்கு அதி உன்னத முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நமது திருவள்ளுவப் பெருந்தகை கல்வி பெறாதவர் முகத்தில் இரண்டு புண்கள் உடையவர் என்று எடுத்துரைத்திருக்கிறார். இதனால்தான் நமது தமிழ்ச்சமூகம் கல்வியை உயிரினும் மேலாக மதித்து கற்று முன்னேறினார்கள். இன்றும் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

நமது தாய் நாடாம் இலங்கை சிறிய நாடாக இருந்தாலும் கல்வியில் முன்னேற்றம் கண்ட நாடாகவே இன்றுவரை விளங்குகின்றது. கல்வி முன்னேற்றத்தால் நமது நாட்டில் படிப்பறிவில்லாவர்கள் மிக மிகக்குறைவு என்றுதான் கூறலாம். பல இனங்கள் வாழும் நமது நாடு இன்று கல்வி, கணனி, தொழில்நுட்பத்துறைகளில் வளர்ச்சி பெற்ற நாடாகவே இருந்து வருகின்றது. இன்று உலகின் தலைசிறந்த 100 பல்கலைக்கழகங்களில் ஒன்றாக பேராதனைப் பல்கலைக்கழகம் இடம்பிடித்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

உலகை அச்சுறுத்திவரும் கோரோனா தொற்று நோயின் தாக்கத்தால் இன்று நமது நாட்டிலும் கல்விநிலை சீரழிந்து காணப்படுகின்றது. பாடசாலைகள் இயங்காமல் இருக்கின்றன. இணையவழிக்கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தாலும் வறிய பாமர மக்களுக்கு இந்த வசதிகள் அடியோடு இல்லாமல் போயுள்ளன. இதனால் எதிர்கால கல்வி நிலை பாதிக்கும் என பல தரப்பினரும் கவலை கொண்டுள்ளனர்.

இலங்கையில் இலவசக்கல்வியை ஆரம்பித்து வைத்தவர் காலம்சென்ற கன்னங்கார என்ற சிங்களப் பிதாமகனாவர். இவரை இந்நாளில் நினைவு கொண்டு வாழ்த்துவோம். தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்த நமது நாட்டில் இன்று காணப்படும் பாடசாலை விபரங்களை நோக்குவோம்.

– நாடுமுழுவதும் 10,166 பாடசாலைகள் காணப்படுகின்றன.

– மேல் மாகாணத்தில் அரசாங்க பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளுமாக மொத்தம் 2,802 பாடசாலைகள் உள்ளன.

நாடு முழுவதும் தேசிய பாடசாலைகள் 374, மாகாண பாடசாலைகள் 9792. மொத்தம் 10,166

நாடு முழுவதும் 25 கல்வி மாவட்டங்களில் 99 கல்வி வலயங்கள் காணப்படுகின்றன. ஆகக் கூடிய 17 கல்வி வலயங்கள் கிழக்கு மாகாணத்தில் உண்டு. குறைந்த கல்வி வலயங்கள் 7 சப்பிரகமுவ மாகாணத்தில் காணப்படுகின்றன.

மாகாணம் – மாவட்டங்கள் – கல்வி வலயங்களின்எண்ணிக்கை

1 – கிழக்கு மாகாணம் – 3 – 17
2 – மத்திய மாகாணம் – 3 – 15
3 – வட மகாணம் – 5 – 12
4 – தென் மாகாணம் – 3 – 11
5 – மேல் மாகாணம் – 3 – 11
6 – ஊவா மாகாணம் – 2 – 10
7 – வடமத்திய மாகாணம் – 2 – 08
8 – வட மேல் மாகாணம் – 2 – 08
9 – சப்ரகமுவ மாகாணம் – 2 – 07

**நாடுமுழுவதும் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை.**

மாகாணம் – தேசியப் பாடசாலைகள் – மாகாண பாடசாலைகள்.

1. மத்திய மாகாணம் – 54 – 1,466 – 1,520
2. மேல் மாகாணம் – 75 – 1,279 – 1,354
3. வடமேல் மாகாணம் – 37 – 1,209 – 1,246
4. சப்ரகமுவ மாகாணம் – 28 – 1,092 – 1,120


கன்னங்கார

5. கிழக்கு மாகாணம் – 40 – 1,075 – 1,115
6. தென் மாகாணம் – 67 – 1,040 – 1,107
7. வட மாகாணம் – 22 – 967 – 989
8 – ஊவா மாகாணம் – 36 – 862 – 898
9. வடமத்தியமாகாணம் – 15 – 802 – 817.
மொத்தம் 374 – 9,792 – 10,166.

**தகவல்:- கல்வி அமைச்சின் பத்திரிகைச் செய்தி.**



## வாசகர் திருமுகம்

தென்னகத்தாரகையாக பட்டொளி வீசி பறந்து வந்த தென்மர்இதழை திறந்த பொழுது ஆச்சரியமானேன்,ஆனந்தமடைந்தேன்,பேருவகை கொண்டேன்.எடுத்த எடுப்பிலே வாசித்து விட்டேன்.நான் எழுத்தாளரோ,கவிஞரோ அல்ல வர்ணித்து எதையும் கூறமுடியாது.

பத்திரிகை மற்றும் புத்தகங்களில் அதிகமான எழுத்து பிழைகள்,கருத்து,தமிழ் ,வசனப்பிழைகள் வருவதுண்டு ஆனால் தென்மர் இதழில் இவற்றை கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்காக தென்மர் குழுமத்தை பாராட்டுகிறேன்.

தென்மர் என்பது அழகான பெயர், அர்த்தமுள்ள பெயர், கருத்தாளமிக்க சொல் ஆண்பால் பெண்பால் என்ற பேதம் எதுவும் இல்லாமல் தென்மர் பொதுப்பால் உணர்வுடன் உருவானது சிறப்பு.

மாதம் ஒரு பத்திரிகையாக தென்மர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.மாணவர் முற்றம், நீத்தார் நினைவு,சொல்லேருழவர்,தென்மராட்சி செய்திகள் என பல விடயங்களை தாங்கி தென்மர் வருவது சிறப்பு. மாணவர்கள் தான் எதிர்கால தூண்கள் அவர்களை ஆற்றல் மிகுந்தவர்களாக,ஆளுமைமிக்கவர்களாக உருவாக்க வேண்டும் தெனமர் அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் கூடுதலான கிராமங்களை கொண்ட தென்மராட்சி புதினங்களை அறிவதற்கு ஆவலாகவுள்ளோம்.துறைசார்ந்த தென்மராட்சி வல்லுனர்களை அடையாளம் கண்டு அவர்களுடன் உரையாடி அவர்களின் பேட்டிகள் தென்மரில் வெளியாக வேண்டும் .

**தென்மர் வாழ்க, வளர்க.**

**- வாசகி - ஐரோப்பா -**

## தென்மர் அற்புதமான பத்திரிகை

எவருமே விமர்சனம் எழுதவில்லை. அற்புதமான பத்திரிகை.
ஒரு அனுபவமுள்ள பத்திரிகையாளரால் தான் இது முடியும் Typing design எல்லாமே அற்புதம்.

தென்மராட்சியின் முதன்மை பத்திரிகையாக மிளிரவைப்போம்.

நான் பத்திரிகையின் உள்ளடக்கம் அனைத்தையும் வாசித்தேன். முதல் பத்திரிகையே என்னை தென்மராட்சிக்குள் கொண்டு சென்றுவிட்டது. இப்பத்திரிகை என்ன செய்யப்போகிறது என்பது தெட்டத்தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

பலரின் உழைப்பு இதில் உண்டு அனைத்து பத்திரிகை குழு உறுப்பினர்களுக்கும் வடிவமைத்தவர்களுக்கும் ஆயிரம் நன்றிகள்.

**- சோதி. Uk- கொடிகாமம் -**

## பணிதொடரட்டும்

நட்பிற்கு நன்றி கூறல் அழகன்று இருப்பினும் நல்லவைகளை பாராட்டியே ஆக வேண்டும்.

உறவுகளே!

இப்பணியை அர்ப்பணிப்புடன் திறம்பட ஆற்றிய சுபாஸ்,துரைசிங்கம் இருவருடன் சேர்ந்து இருந்தேன் என்பதே எனது பெருமை.

வாழ்த்துகள் உங்கள் பணிதொடர உங்களில் ஒருவன்


**- இரா.சத்தியசீலன் - கனடா -**

வாழ்த்துகள்,வரவேற்பு
தென்மர் வாசித்தேன்
மேலும் மேலோங்க வாழ்த்துகிறேன்

**- மு.குணரத்தினம் - நோர்வே -**

# நீத்தார் நினைவலைகள்

# தென்மராட்சி மண்ணின் மைந்தன் வ.ந.நவரத்தினம்




"முடியும் எனக்கருதினால் எதுவும் முடியும்" - இந்த வரிகளை என்னுள் விதைத்தவர் சாவகச்சேரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந. நவரத்தினம்.1976 ஆடி 1ஆம் திகதி எனது கிராமத்தில் நிகழ்ந்தவைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அவரை மிக அருகில் சென்று கதைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது .அவரிடம் ஆட்டோகிராப்பை கொடுத்தேன் பேனாவை எடுத்து கையெழுத்து போட்டு என்னிடம் கையளித்தார். அதை பெற்று திறந்து பார்த்தேன் அதில் எழுதப்பட்ட வரிகள் தான் மேலே உள்ளது.

முதுமொழிகள், கவிவரிகளை எங்குகண்டாலும் அவற்றை பிரதிபண்ணி வைப்பதில் எனக்கு விருப்பம் அதிகம் இதனால் இந்த வரிகள் பசுமரத்தணி போல் என்னுள் பதிந்து போனது. இப்படியாகத்தான் எனக்கும் அவருக்கான தொடர்பு ஏற்பட்டது. அவரது அரசியல் பிரசுரங்களில் அர்த்தம் பொதிந்த வரிகள் இருக்கும் கூட்ட மேடைகளில் அற்புதமாக உரையாற்றுவார் அதனால் அவர் சார்ந்த தமிழரசு கட்சியின் ஆதரவாளரானேன். ஆதரவாளர்களை அடிக்கடி சந்திக்கும் அவர் இளைஞர்களையும், மாணவர்களையும் சந்திப்பார் .தென்மராட்சி இளைஞர்கள் கூடுதலாக கலந்து கொண்ட கூட்டமொன்றில் நவரத்தினம் ஐயாதான் பிரதம விருந்தினர்அக்கூட்டத்தில் இளைஞர்களிடம் மனம் விட்டு பேசினார்.

உங்கள் பிரச்சனைகளை கூறுமாறு கேட்டார் எவருமே கதைக்கவில்லை நான் எழுந்து நின்று கருத்து சொல்லமுற்பட்ட போது வார்த்தைகள் வராமல் நா தழுதழுத்தது எனது முதுகில் தட்டிக் கொடுத்து தொடர்ந்து பேச உற்சாகப்படுத்தினார்.

அன்று தொடக்கம் எந்த இடத்திலும் எவரோடும் உரையாடும் துணிவை பெற்றேன். 1956ஆம் ஆண்டு சாவகச்சேரி தொகுதியில் தமிழரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று தனது 27 வயதில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

56,60,65,70 ,77என போட்டியிட்ட தேர்தலில் எல்லாம் ஐயாதான் வாகை சூடினார் 1983 வரை தென்மராட்சி மண்ணின் முடி சூடாமன்னராக திகழ்ந்தார். சர்வதேச பாராளுமன்ற இலங்கை பிரதிநிதியாக இயங்கியவர் அந்த கூட்டங்களில் ஈழத்தமிழர் பிரச்சினையை எடுத்துரைத்தவர். 1929ஆனி 5 பிறந்த இவர் 1991 ஜனவரி 29 கனடாவில் காலம் ஆனார். சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் இலங்கை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று 1954 இல் இருந்து யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாக கடமையாற்றினார்

1958 கலவரத்தை தொடர்ந்து இவர் உட்பட 9 தமிழரசு கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர் அப்போது எங்கள் ஈழத்தமிழ் நாடே இசை வாழும் பொன் நாடே என்ற பாடல் உட்பட விடுதலை கீதங்களை பாடிக்கொண்டிருந்ததாக நான் சந்தித்த நாட்களில் தெரிவித்ததுடன் ராகம் தாளம் பல்லவி சுருதி விலகாது பாடிக்காட்டினார் நல்ல குரல் வளம் நிறைந்த சங்கீத ஞானமும் அவரிடம் உள்ளதை கண்டேன் மேடைப்பேச்சுக்கு மட்டுமல்ல பாடுவதற்கும் அவரது குரல் இசைவானதாக இருக்கிறது.

1961 சத்தியாக்கிரக போராட்டத்தை ஏனைய தமிழரசு கட்சி உறுப்பினர்களுடன் முன்னின்று நடத்தினார். தமிழரசு கட்சி தலைவர் தந்தை செல்வா 1972 ஒக்டோபர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்த போது நவரத்தினம் நாடாளுமன்ற கட்சி தலைவரானார். தமிழர் விடுதலை கூட்டணி. பிரதிதலைவர்களில் ஒருவராகவும் இயங்கினார்

1976 மே 21 அரசுக்கு எதிராக துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் ஏனைய உறுப்பினர்களோடு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் தந்தைசெல்வா, ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற வழக்கறிஞர்கள் இந்த வழக்கை நடத்தி 1977 மாசி 10 இல் விடுதலை பெற்று கொடுத்தனர்,

தமிழ் ஈழத்திற்கு ஆதரவளிப்தில்லை என நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கான ஆறாம் திருத்த சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர்களும் 1983 முதல் நாடாளுமன்றத்தை பகிஸ்கரித்தனர் 3 மாதங்கள் தொடர்ந்தன 1983 ஐப்பசி 22 இல் அனைவரும் பதவியை இழந்தனர் இதில் நவரத்தினமும் ஒருவர் நாட்டு நிலைமை மோசமடைந்தது வாழ்வதற்கான சூழலே அற்றுப்போனது ஐயா புலம் பெயர்ந்தார் அவர் நாடு கடக்காது விட்டிருந்தால் ஆலாலசுந்தரம், தர்மலிங்கம், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற முன்னாள் தமிழ் எம்பிகள் போயில துரோகி முத்திரை குத்தப்பட்டு போட்டுத்தள்ளியிருப்பார்கள் அமிர், யோகேஸ்வரன் ஆகியோரின் மரண நிகழ்வுக்காக ஐயா யாழ்ப்பாணம் வந்தார். 1988 ஆடி 15 ஆம் திகதி செல்வா நினைவு சதுக்கத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன. ஈழநாடு சார்பில் அதில் கலந்து கொண்டேன் நினைவுத்தூபின் மேல் பக்கத்தில் நவரத்தினம் ஐயா நின்றார் அவரது கறுத்து தாடி நரைவிழுந்திருந்தது ஆனாலும் அந்த ஒளி வீசும் கண்கள் பட்டொளி வீசியபடியே இருந்தன சனத்திரள் அதிகம் ஐயாவை நெருங்க முடியவில்லை அவரை நானும் நோக்க அவர் என்னையும் நோக்க கண்களாலே அடையாளம் கண்டோம் அதுதான் ஐயாவை சந்தித்த இறுதி நாள் 1990 களில் ஐயாவின் வீட்டில் வாழக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது நுணாவில் வைரவர் கோயில் அருகே யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அழகான அந்த வீட்டில் நூலகம் அமைத்து எனது இருப்பிடமாக்கியும் வாழ்ந்த நாட்கள் ஐயாவை என்றும் நினைவூட்டும் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை தாடியை களைய மாட்டேன் என உறுதியுடன் இருந்தவர்.

தாயகத்தில் தனது நிழலாக இருந்த அவரது செயலாளர் திரு வி.சு.துரைராசா மடியிலே கனடாவில் உயிர் நீத்தார் .அவர் மறைந்தாலும் நிறைந்த நினைவுகளுடன் எங்களுடன் வாழ்வார்.

# கார் ஓட்டபந்தயத்தில் சிங்கம் வாகனங்களின் வைத்தியர்!

துவாரகன்



மனிதர்கள் மற்றும் உயிரினங்களுக்கு மட்டுமல்ல இயந்திர சாதனங்கள், வாகனங்களின் பழுதுகளை திருத்துபவர், இயங்க வைப்பவரையும் டாக்டர் என புகழ வேண்டும் என சொல்வார்கள் வாகன உரிமையாளர்கள். தென்மராட்சி கைதடி நாவற்குழியில் உருவாக இலங்கை தலைநகர் கொழும்பில் புகழ்பெற்ற வாகன திருத்தகம் நடத்தியவர் அமரர் பாலசிங்கம் அதுமட்டுமல்ல கார் ஓட்டப்பந்தயத்திலும் தன்னிகரில்லாத சாதனையாளராக திகழ்ந்தார்.

வாகனங்களுடன் வாழ்ந்து பழகியவருக்கு அதனை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் தான் நினைத்தபடி அதனை கையாளவும் பிறர் தயவு தேவையில்லை.

அதனால் தான் வாகன திருத்துனராக, கார்ஓட்ட பந்தய வீரனாக திகழ்ந்தார். கொழும்பில் பாலா கராஜ் என்றாலே. பிரபலம் தான்.

மந்திரிகள் மற்றும் முக்கியமானவர்களின் நம்பிக்கை நட்சத்திரம் பாலா என்றால் அதுமிகையல்ல. அவரது பிரிவு மாபெரும் பேரிழப்பு, ஈடுசெய்ய முடியாத இழப்பு. கொழும்பில் கொடிகட்டி பறந்த இவரது தொழிலகம் பாதுகாப்பு தரப்பினரின் சல்லடைக்கு உள்ளானது.

பாலா கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்தார். இலங்கையில் தமிழருக்கு இன்னொரு பெயர் பயங்கரவாதி அதற்காகவே அவர் கைதானார். போர் தந்த வலியும் வேதனையும் அப்பாவியான பாலா அண்ணைக்கும் ஏற்பட்டது அன்று கொரோனா என்னும் கொலைகாரன் கொலைகளத்திற்கு வலிந்து கடத்திவிட்டான் இன்று.

1999ஆம் ஆண்டு கொக்கல சுப்பர் குரோஸ் கார் ஓட்ட பந்தயத்தில் நுழைந்து தனது திறமையை வெளிப்படுத்தினார். எஹெலியா கந்த, திஸ்ஸ மகாராம, கட்டுக்குருந்த, பன்னல, மீரிகம, குருணாகல், அனுராதபுரம், எம்பிலிபிட்டிய, கல்துப, மின்னேரியா, வெசில், சென்ஜேம்ஸ், பொக்ஸ்கில் நுவரேலியா, ரதல்லா, மாகஸ்தோட்ட, பத்தரமுல்ல, பெலவத்த, குக்குல்ல ஆகிய இலங்கையின் அனைத்து முக்கிய கார் ஓட்ட பந்தயங்களிலும் பங்கெடுத்து தனது திறமையை வெளிப்படுத்தியவர். வருடாந்தம் 20க்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்றி இலங்கை கார் ஓட்ட போட்டியாளர் பட்டியலில் தனியிடத்தை பெற்றார்.

நம்மவருக்கு பெருமை சேர்த்த, புகழ் பெற்று தந்த அவரது திறமைக்கு மதிப்பளிக்கும் வகையில் நெதர்லாந்தில் 2008 சர்வதேச நிகழ்வில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தலைநகர் கொழும்பில் தலைநிமிர்ந்து வாழ்ந்த பாலாவின் காலம் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டும்.

# கோடிகளைத் தாண்டும் உதவிகள்

## ஜேர்மனி 'மண்' சஞ்சிகையின் மனித நேயப்பணி மனம் திறக்கிறார் ஆசிரியர் சிவராஜா

சமுதாய அக்கறையோடு மனித நேயப்பணிகளில் அர்ப்பணிப்போடு இயங்கும் 'மண் சஞ்சிகை' கடந்த (1990) மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஜெர்மன் நாட்டிலிருந்து வெளி வருகிறது. கல்வி, கலை, இலக்கிய, சமூக இதழாக அறிமுகமான 'மண்'இலக்கிய பரப்பில் வாசகர்களுக்குத் தீனி வழங்கியதுடன் எழுத்தாளர், படைப்பாளிகளையும் ஊக்குவித்து வருகிறது.

ஏற்றுக்கொண்ட கொள்கையில் இம்மியளவும் விலகாது ஏறு நடைபோடும் 'மண்' தாய் நிலத்து யுத்தம் மற்றும் பல காரணங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இயன்ற உதவிகளை வழங்கிவருகிறது. வாசகர்கள் வழங்கும் நன்கொடைகள் மூலம் தாய் நாடெங்கும் தொண்டாற்றி வருகிறது.

யுத்தம்,புயல்,வெள்ளம் போன்ற பேரழிவுகளுக்கு ஊடகங்கள் அவ்வப்போது உதவி வருவது தெரிந்ததே ஆனால் இந்த ஊடகம் ஒரு அரசு சாராத நிறுவனமாக இந்த பணியில் தொடர்ச்சியாக பயணிக்கிறது என்பதுதான் வரலாறு .இது ஒரு தனிமனித முயற்சியானாலும் அதில் பலரை இணைத்து செயற்படுத்துவது பாராட்டப்பட வேண்டும்.

வைரமுத்து சிவராஜா தென்மராட்சி மண்ணின் சிறுகிராமங்களில் ஒன்றான நாவற்குழி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள வேலம்பிராய் கிராமத்தில் பிறந்தவர்.நற்சிந்தனையும் அறப்பணிகளும் இயல்பாக கொண்ட குடும்பத்தில் தோன்றிய இவர் கணக்காளர் பதவியில் உயர்ந்தார்.வன்னிப்பிரதேசத்தில் துணுக்காயில் கடமையிலிருந்த போதே 1973ம் ஆண்டில் 'ஈழநாடு' பத்திரிகையின் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேசங்களின் நிருபராக ஊடக பயணத்தை ஆரம்பித்தார்.

1983இல் புலம்பெயர்ந்து அகதியாக தஞ்சமடைந்த போதும் ஊடக பணியை கையிலெடுத்தார் .அதனாலே மண் சஞ்சிகையினை 1990ம் ஆண்டில் ஜேர்மனியில் தொடங்கினார். ஊடகங்கள் ஆரம்பித்து முப்பது வருடங்களாக மண் சஞ்சிகை இயங்குவது மகத்தான பணிதான். எனவே இந்த அனுபவங்கள் தொடர்பாக மண் ஆசிரியர்,ஊடக செயற்பாட்டாளர், மனித நேயத் தொண்டர் வைரமுத்து சிவராஜா அவர்களை 'தென்மர்' பத்திரிகை நேர்காணல் செய்த போது மனந்திறந்தார்…

**கேள்வி:- உங்கள் எழுத்துலக பிரவேசம் எப்படி நிகழ்ந்தது?**

எனது எழுத்துலகம் நீண்ட காலத்திற்குரியது. எனது வீட்டில் புத்தகங்கள், பத்திரிகைகள், படிக்கும் போது, நான் கல்வி கற்ற பாடசாலையான யாழ். நாவற்குழி மகா வித்தியாலயத்தில் இலக்கிய மன்றம், எமது ஊர் 'காந்தி' சனசமூக நிலையத்தின் செயலாளர் போன்ற பல பதவிகளில் இருந்தபடியால் என் சிறுவயது தொடக்கம் வாசிப்புப் பழக்கமமும் எழுத்துப் பழக்கமும் வெகுவாகக் கொண்டிருந்தேன். அத்தோடு தமிழ் மொழியில்

அதிக தாகம் கொண்டிருந்தபடியால் எழுத்துலகத்தில் பிரவேசிக்க இலகுவாக இருந்தது.

**கேள்வி:- உங்கள் வழிகாட்டி என்றால் யாரை அடையாளம் காட்டுவீர்கள்?**

பாடசாலையில் கல்விபோதித்த இந்து, கிறிஸ்த்தவ, இஸ்லாமிய ஆசிரியர்கள், எனது சகோதரர் நடராசா, எனது ஊர் கல்விமான்களை வழிகாட்டிகளாகக் குறிப்பிடலாம்.

**கேள்வி:- ஈழநாடு பத்திரிகை துணுக்காய் நிருபராக பணியாற்றிய அனுபவத்தை பகிர்ந்து கொள்ளவும்?**

யாழ் ஈழநாடு பத்திரிகையின் நிருபராக 1973 - 1983 வரை முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் - பாண்டியன்குளம் பிரதேசங்களின் கடமை புரிந்தேன். பல அரசியல் வாதிகள்,சமூ கச் செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், அதிபர்கள், உயர் அதிகாரிகளான காரியாதிகாரிகள் (DRO) பிரதேச செயலாளர்கள் (AGA) மார்க்கண்டு, குமாரசாமி, கார்த்திகேசு, மாவட்டக்காணி அதிகாரிகளாக இருந்த திரு பரமேஸ்வரன், திரு சிவச்சாமி, அமரர் வேலுப்பிள்ளை (விடுதலைப்புலிகள் தலைவரின் தந்தை) கவிஞரும் தென்னிந்திய நடிகருமான வ.ஐ.ச.ஜெயபாலன், மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவரும் நீதிவானுமாகிய காலம்சென்ற ஞானச்சந்திரன், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சித்தலைவர் காலம் சென்ற என்.எஸ். காதர், பாண்டியன்குளம் கமநலசேவைகள் நிலையத்தின் தலைவராக இருந்த திரு நடராசா, (எனது சகோதரர்) இலங்கையின் மூத்த எழுத்தாளரும் அதிகமான புத்தகங்களை எழுதி வெளியிட்டவருமான செங்கை ஆழியான் (க.குணராசா) உட்பட பலரிடம்



நான் எடுத்த பேட்டிகள் அவ்வப்போது ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தன. இவற்றைவிட பற்பல சுவாரசியமான நிழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள், கலை கலாச்சார நிகழ்வுகள், கோவில்களின் நிகழ்வுகள் இப்படிப் பல செய்திகள் வெளிவந்தன.

**கேள்வி: உங்களின் படைப்புகள் தொடர்பாக கூறவும்?**

எனது படைப்புகள் இலங்கையில் நான் வாழ்ந்த காலத்தில் ஈழநாடு, வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன. சிரித்திரன் சஞ்சிகையிலும் சில ஆக்கங்கள் வெளிவந்தன. இலங்கை வானொலியிலும் பல ஆக்கங்கள் அவ்வப்போது ஒலித்திருக்கின்றன.

1983ல் புலம்பெயர்ந்து யேர்மனிக்கு வந்ததன் பின்பு அப்போது ஜேர்மனியில் வெளிவந்த பல சஞ்சிகைகளில் (கலைவிளக்கு, அறுவை, ஏலையா, தளிர், தேனி, தமிழ்நாதம், துண்டில், சிறுவர் அமுதம், கடல், பெண்கள்மலர், இன்னும்பல சஞ்சிகைகள்) மலேசியா செம்பருத்தி, இந்தியா - தமிழ்நாடு இனிய நந்தவனம், ஏழைதாசன் சஞ்சிகைகளிலும் இலங்கை ஞானம், மல்லிகை சஞ்சிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன.

யேர்மனியில் வெளிவந்த 'ஈழம்' 'தமிழருவி' பத்திரிகைகளில் எனது பல ஆக்கங்கள் வெளிவந்தன. 27 ஆண்டுகளாக யேர்மனியில் வெளிவந்து கொண்டிருக்கும் 'வெற்றிமணி' சஞ்சிகை மற்றும் ஐரோப்பாவில் கடந்த 17 ஆண்டுகளாக வெளிவரும் 'அகரம்' சஞ்சிகையிலும் எனது ஆக்கங்கள் தற்போதுவரை வெளிவந்துகொண்டிருக்கின்றன.

பாரிஸ் ஈழநாடு, ஈழமுரசு, லண்டன் ஈழகேசரி, கனடா உதயன் போன்ற பத்திரிகைகளிலும் பிரான்ஸ் ரி.ஆர்.ரி வானொலி, லண்டன் தமிழ் றேடியோ, ஐரோப்பிய தமிழ்றேடியோ ஜேர்மனி, லண்டன் தீபம், ஐ.பி.சி தொலைக்காட்சிகளிலும் அவ்வப்போது எனது படைப்புகள் வெளிவந்தன.

கடந்த (32) முப்பத்திரண்டு ஆண்டுகளாக யேர்மனியில் வெளிவரும் 'மண்' கல்வி, கலை,இலக்கிய, சமூக சஞ்சிகையின் நிறுவனராகவும் பிரதம ஆசிரியராகவும் இருந்து வருகின்றேன். இதுவரை 210 சஞ்சிகைகள் வெளிவந்துவிட்டன. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் உலக நாடுகளில் தொடர்ச்சியாக 32 வருடங்களாக வெளிவரும் தமிழ்ச்சஞ்சிகை என்ற உலக சாதனையுடன் வெளிவந்துகொண்டிருக்கின்றது.

தனிப்பட்ட முறையில் எனது வெளியீடுகள்.

1- 'சிறுவர் அமுதம்' சஞ்சிகை ஆசிரியரின் மறைவையொட்டிய நினைவு மலர்.

2 - 'கல்லறைப் பூக்கள்' சிறுகதைத் தொகுப்பு.

3- 'அலைகள் அறுபது' எனது 60வது பிறந்தநாளில் வாழ்வியல் தொகுப்பு.

4- 'நூறாவது ஆண்டு மலர்' எனது தாயாரின் நூறாவது வயது நினைவு மலர்.

5- 'மனிதரில் எத்தனை நிறங்கள்' சிறுகதைத் தொகுப்பு.

**கேள்வி:- புலம்பெயர்ந்த பின் 'மண்' என்னும் சஞ்சிகை வெளியிட முனைந்தமைக்கான காரணம்? சஞ்சிகை எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இது வரை எத்தனை இதழ்கள் வெளிவந்தன?**

1990 தைப்பொங்கல் தினமான தை 14ஆம் திகதி நான் வாழும் டியூஸ்பேர்க் நகரில் நானும் நண்பர் அமிர்தநாதனும் (இவர் கடந்த 25 வருடங்களாக இலங்கையில் வசிக்கின்றார்.) ஆரம்பித்தோம்.

1990 தை மாதம் தொடக்கம் 2021 ஐப்பசி வரை 210 சஞ்சிகைகள் வெளிவந்துவிட்டன. மண் சஞ்சிகையின் ஆண்டுவிழாவையொட்டி 8 சிறப்பு மலர்கள், 8 சிறுவர் சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன.

இச்சஞ்சிகையை வெளியிடக் காரணமாக…

- அன்றைய காலம் 1985 ஆண்டளவில் ஐரோப்பாவில் ஆங்காங்கே சில சஞ்சிகைகள் தான் வெளிவந்தன. பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்கட்சிகள் எதுவும் கிடையாது.

- இந்த நிலையில் புலம்பெயர் தமிழர்களின் கல்வி, தாய்மொழி, வாசிப்புப்பழக்கம் அழிந்துவிடக்கூடாது, இங்கு பிறந்த பிள்ளைகள், சிறுவயதில் தாய்நாட்டைவிட்டு வந்த பிள்ளைகளின் தமிழ்க்கல்வி இழந்துவிடக்கூடாது. நமது பாரம்பரியங்கள், கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்கள், முகவரிகள் தொலைந்துவிடக்கூடாது. அடுத்த சந்ததி தமிழை எடுத்துச் செல்ல வேண்டும் என்னும் பெருநோக்கில் ஆரம்பிப்பதற்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

இன்னும்.. அன்றைய காலகட்டத்தில் இந்த நாட்டுமொழிதெரியாமல் இன்னல்பட்டோருக்கு மொழியைப் புகட்டுதலுடன். அப்போ வேலை இல்லாமல் வீடுகளில் முடங்கிக்கிடந்த பெண்களின் பொழுதுபோக்கு, வாசிப்புப் பழக்கம், எழுத்துப் பழக்கம், தகவல் பரிமாற்றம் போன்ற அபிவிருத்திக்காகவே தூரநோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

இன்னும் பலர் தமது படைப்புகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் இல்லாமல் வாழ்ந்த

அன்றைய கவிஞர்கள், எழுத்தாளர்களை ஊக்குவித்தலும் அவர்களின் படைப்புகளை வெளிக்கொண்டு வருதலும் ஒரு காரணமாக அமைந்தது. எமது சஞ்சிகையில் எழுதி வளர்ந்த சிறுவர்கள், படைப்பாளிகள் இன்று ஐரோப்பாவில் புகழ்படைத்த படைப்பாளிகளாகவும் ஊடகவியலாளர்களாகவும் சமூக ஊடகங்களின் பிரபலங்களாகவும் விளங்குகின்றனர் என்று பெருமையாகக் கூறலாம்.

**கேள்வி:- மண் சஞ்சிகைக்கு வாசகர் மற்றும் எழுத்தாளர் ஒத்துழைப்பு எப்படியிருந்தது ?**

ஜேர்மனியில் மட்டுமல்ல, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, சவுதிஅரேபியா நாடுகளில்கூட வாசகர்களும் எழுத்தாளர்களும் இருந்திருக்கிறார்கள். இவர்களின் படைப்புகள் அவ்வப்போது மண் சஞ்சிகையில் உலகப்பரப்பு எங்கும் வெளிவந்திருக்கின்றன. தரமான கலை இலக்கியப் படைப்புக்களுடன் சஞ்சிகை ஊடான தாயக சமூகப் பணிகளும் இன்று வரை முன்னெடுத்துவருவதால் இச்சஞ்சிகை தொடர்சியாக வெளிவருவதற்கு மூலகாரணமாகும். வாசகப் பெருமக்களின் பேராதரவு இருந்திராவிடின் முகவரி இல்லாமல் போயிருக்கும். எனவே இச் சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் நன்றிகள். கடந்த முப்பது வருடங்களாக சந்தாதாரர்களாக இருந்துவரும் அன்பு உள்ளங்களுக்குப் பாராட்டுகள்.

**கேள்வி:- வழமை போலவே கலை இலக்கிய இதழாக தொடங்கப்பட்ட மண் மனிதாபிமான பணிகளை செய்வதற்கான எண்ணம் எப்படி ஏற்பட்டது?**

எனது தாய் - தந்தை, சகோதரர்களின் ஆரம்ப வழிகாட்டல் முதல்காரணம். எங்கள் குடும்பம் பிறந்த ஊரில் சமூகசேவைக்குப் பெயர்போன குடும்பம். இருவர் சமாதான நீதிவானாக இருந்திருக்கிறார்கள். ஒருவர் காலம் சென்ற சகோதரர் சரவணமுத்து மற்றவர் இப்பொழுது லண்டனில் வாழ்ந்துகொண்டிருக்கும் நடராசா. எங்கள் குடும்பம் காலாதிகாலம் சமூகப் பணிகளைக் கொண்டிருந்தபடியால் நானும் அதில் ஈர்க்கப்பட்டு, ஈடுபட்டுக்கொண்டேன் என்று கூறலாம்.

(07ஆம் பக்கம் பார்க்க)

# கோடிகளைத் தாண்டும் ...



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கேள்வி:- மண் மனித நேய பணி, பயனாளிகள், நன்கொடையாளர் விபரங்களை சுருக்கமாக கூறவும்?**

தனிப்பட்டமுறையில் நானும் எனது பிள்ளைகளும் வருடாவருடம் தாயகத்திலுள்ள ஆதரவற்றவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு பல வருடங்களாகத் தொடர்ச்சியாக நிதி உதவி செய்துவருகின்றோம். யேர்மனியில் வசிக்கும் எனது மகள் சிவதர்சினி கடந்த 20 வருடங்களாக வவுனியா 'அருளகம்' சிறுவர் காப்பகத்தில் வசிக்கும் ஒரு பிள்ளையின் செலவுக்காக வருடாவருடம் ஒரு லட்சம் ரூபாவை உதவியாக வழுங்கிவருகிறார்.

இவற்றைவிட மண் சஞ்சிகையின் வாசகர்களின் மனிதநேயம், எம்மீது கொண்ட நம்பிக்கை காரணமாக கடந்த (30) முப்பது வருடங்களாக அவர்கள் மனமுவந்தளித்த பேருதவிகளால் சுமார் (3) மூன்றுகோடி ரூபாவை தாயகத்திலுள்ள சுமார் (25) ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லம், மாற்றுத்திறனாளிகள் இல்லங்கள், அகதிகள் நிலையங்கள், சுனாமி அனர்த்தம், வெள்ள அனர்த்தம், போர் அனர்த்தம், கொரோனா அனர்த்தம், கல்விக்கு உதவுதல் எனப் பல்வேறு உதவிகளை இச்சஞ்சிகை ஊடாகச் செய்து வருகின்றோம். இப்பணிகள் தொடர் பணியாக நடைபெறுகின்றன.

**கேள்வி:- சஞ்சிகை ஆசிரியர், ஜெர்மன் எழுத்தாளர் சங்கம், தென்மராட்சி சர்வதேச ஒன்றியம் என பன்முகத்தன்மை கொண்ட செயற்பாட்டாளராக எப்படி உங்களால் இயங்க முடிகிறது?**

தமிழ்பாடசாலை ஆசிரியர் மற்றும் மண் சஞ்சிகையின் பிரதான ஆசிரியர், ஒரு விளையாட்டு வீரனாக இருந் திருக்கிறேன். டியூஸ்பேர்க் தமிழர் விளையாட்டுக் கழக போகர், ஜேர்மனி தமிழ்க்கல்விச்சேவையின் (ஐரோப்பா) நிர்வாக உறுப்பினர் (கடந்த 30 வருடங்கள்). ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஆரம்பகர்த்தாகவும் தலைவராகவும் 17 வருடங்களாகக் (2000 - 2017) கடமையாற்றியிருக்கிறேன். தமிழும் சமூக செயற்பாடுகளும் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கிறேன். தற்போது புலம்பெயர் நாடுகளின் தென்மராட்சி அகில உலக ஒன்றியத்தின் (கல்விப்பகுதி) உறுப்பினராகவும், 'தென்மா' பத்திரிகை ஆசிரியர்குழு உறுப்பினராவும் இருந்து வருகின்றேன்.

எனது எழுத்து, சமூகப்பணிகள் ஐம்பது ஆண்டுகளைப் பிடிக்க இன்னும் சில ஆண்டுகள்தான் உள்ளன. முடியுமானவரை இப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என நான் உறுதி எடுத்து வாழ்வதால், எனது முயற்சி, தேடல், உழைப்பு அனைத்தும் இப்பணிகளுக்காகவே அர்ப்பணிப்புடன் உண்மைத்தன்மையுடன் பல பணிகளை மேற்கொண்டு வருகின்றேன். காலம் உருண்டோடுவது போல நானும் ஓடிக்கொண்டெ இருக்கின்றேன். முடிந்தவரை நல்லதை செய்யவேண்டும் என்பதுதான் பெரு நோக்கமாகும்.

இப்பணிகளைச் செய்வதற்குப் பக்கபலமாக இருப்பவர்கள் எனது மனைவி இராஜேஸ்வரி. இவரும் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல கவிஞரும்கூட. 2019ம் ஆண்டு 'உயிரினில் பாதி' என்னும் கவிதை நூலை எழுதி வெளியிட்டுள்ளார். அடுத்தது எனது மூ ன்று பிள்ளைகள். மூவரும் இங்கு பிறந்து வளர்ந்து கல்வி கற்று பட்டங்கள் பெற்றவர்கள். தமிழ் மொழியை எழுத, பேச, வாசிக்கத் தெரிந்தபடியால் மண் சஞ்சிகையின் வளர்ச்சிக்கு இவர்களின் பங்களிப்புகள் நிறையவே இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**கேள்வி:- தாயகத்தில் உங்கள் அழகிய கிராமம் குறித்து கூறவும்?**

எனது கிராமம் மிகச் சிறியது. 1973ம் ஆண்டு வரை ஊரில், 1973 - 1983 வன்னிப்பிராந்தியம், 1983 தொடக்கம் இற்றைவரை ஜேர்மனியில். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற முதுமொழிக்கு.. எனக்கு எல்லா இடமும் எனது சொந்த இடமாகிவிட்டது.

பிறந்த ஊர் அழகிய கிராமம். சாவகச்சேரி தொகுதியில் நாவற்குழி கிராமசபையிலுள்ள வேலம்பராய் என்னும் சிற்றூர். நிலவளம், கடல்வளம், நீர்வளம், பயிர்வளம் எனவும் கல்விச்சாலைகள், ஆலயங்கள் நிறைந்த ஊர். அருமையான மக்கள், நண்பர்கள். சுற்றாடல் சூழல் இயற்கை வளங்களும் நிறைந்த பசி, பட்டினி இல்லாத தென்மராட்சிப் பிரதேசம் என்னும் போது மேலும் மகிழ்வுதான்.

**கேள்வி:- உங்கள் குடும்பம் மகாகுடும்பம் அதைப் பற்றி கூறவும்?**

எனது குடும்பம் பெரிய குடும்பம்தான். கல்வி, அரச உத்தியோகம், தொழில், வியாபாரம், அரசியல், பொதுத் தொண்டு, மனிதநேயப்பணிகள் எனச் சிறந்து விளங்கும் குடும்பமாகும். எனது தந்தையார் ஒரு விவசாயிதான் ஊரிலும் வன்னியிலும் விவசாயம் மேற்கொண்டவர். தாய் சாதாரண குடும்பத் தலைவிதான். சகோதரர்கள் அரச துறைகளில் தலைவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். மேலும் நமது ஊர் 'காந்தி' சனசமூக நிலைத்தை கடந்த 1953ம் ஆண்டு நிறுவி, (தற்போது 68 ஆண்டுகள்) ஆரம்பித்த கர்த்தாவாகவும் எனது குடும்பத்தவர்கள் இருந்திருக்கிறார்கள். இன்றுவரை தென்மராட்சியில் புகழ்படைத்துக் கொண்டிருப்பதை யாவரும் அறிவார்கள். இவற்றைவிட எனது குடும்பவாரிசு செல்வி சர்விகா 2018ம் ஆண்டு உயர்தர மாணவர்களின் அகில இலங்கை பேச்சுப் போட்டியில் முதலாம் இடதஇதைப் பெற்று இலங்கை ஜனாதிபதியிடம் பதக்கம் பெற்றிருக்கிறார். மேலும் கூறுவதாயின் விளையாட்டுவீரர், நடனம், நாடகம், பாடல், ஆடல், கூத்து, எழுத்து, ஊடகம் எனப் பல்வேறு துறைகளில் சாதனை படைத்திருக்கிறார்கள். எனது உடன்பிறப்புகள் தென்மராட்சி மட்டுமல்ல யாழ்குடாநாட்டின் பல ஊர்களில் திருமண பந்தத்தையும் கொண்டிருப்பதுடன் ஒரு சாதனைக்குடும்பமாகவும் திகழ்கின்றது.

**கேள்வி:- நாவற்குழியிலிருந்து சர்வதேசம் வரை இந்த மகாகுடும்பம் பரந்துள்ளது. உங்கள் குடும்பமே ஒரு அரசு சார்பற்ற தன்னார்வ நிறுவனம் என்பார்கள். லண்டனில் வருடாவருடம் குடும்பத்தினர் ஒன்றுகூடி குதூகலிப்பீர்களாமே அது பற்றி கூறவும்?**

மிகச்சரியாகச் சொன்னீர்கள்.. எங்கள் குடும்பம் ஒரு அரசசார்பற்ற தன்னார்வ நிறுவனம்தான்..குடும்ப உறவுகள் அனைவரும் பொதுத் தொண்டு என்றால் முன்னின்று செய்வார்கள். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இது பொருந்தும். இன்று தாயகம், ஐரோப்பா, அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா எனப் பல நாடுகளில் எனது குடும்ப உறவுகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தங்கம்மா - வைரமுத்து எனது தாய் தந்தையர். இருவரும் தற்போது உயிருடன் இல்லை. உலகமெல்லாம் பரந்துபட்டு வாழும் தொப்பிள்கொடி உறவுகளை ஒன்றிணைப்பதற்காகவும். எதிர்காலத்தில் பல நாடுகளில் வாழ்ந்தாலும் ஒருவரை ஒருவர் தெரிந்து அறிந்து கொள்வதற்காகவும், சந்ததிகளின் கல்வி, தொழில், வாழ்வியல் முன்னேற்றங்களை அறிந்து பகிர்ந்து கொள்வதற்காகவும் அன்பு பாசம் உறவுகளை வளர்த்துக் கொள்வதற்காகவும் உறவுகளின் தொடர்புகள் நீடித்து நிலைப்பதற்காகவும் தாய் - தந்தையரின் நினைவாக வருடாவருடம் நினைவுவிழாவை லண்டனில் கோடை கால விடுமறையில் கொணஇடாடி வருகின்றோம். லண்டனில்தான் அதிகமான உறவுகள் வாழ்வதால் அது பொருத்தமான நாடாக உள்ளது.

ஒவ்வொரு கோடை விடுமுறைக்கும் அனைத்து நாடுகளிலிருந்தம் எல்லா உறவுகளும் கலந்து கொண்டு இரண்டு நாள் கொண்டாடமமாக நடைபெறுவது வழக்கமாகும். இதுவரை 12 ஆண்டு விழாக்கள் நடைபெற்றுவிட்டன. இந்த இருநாளும் தாய் - தந்தையரின் நினைவுப் பதிவுகள், ஊரில் இடம்பெற்ற சம்பவங்கள் இடம் பெறும். விளையாட்டுப்போட்டி, அறிவுசார்ந்த போட்டிகள், கலைநிகழ்வுகள் என வெளிக்களத்திலும் உள்ளரங்கத்திலும் சிறப்பாக நடைபெறும். சகல நிகழ்வுகளையும் நமது சந்ததிகளே முன்னின்று செய்து முடிப்பார்கள். இந்த இரு நாட்களும் எல்லோருக்கும் பெரிய ஆனந்தம். மனமகிழ்வோடு மீண்டும் தங்கள் நாடுகளுக்குச் செல்வார்கள்.

இந்த நிகழ்வு உலகத்தில் எங்கும் நடைபெறாத நிகழ்வுதான் என்பதைப் பெருமையாகக் கூறிக்கொள்ளலாம். இதை அறிந்த பல உலக நண்பர்கள் வியப்புடன் 'இப்படியம் நடைபெறுகின்றதா' என்று வியந்து பராட்டுவார்கள். எல்லாவற்றிற்கும் எனது தாய் - தந்தை செய்த புண்ணியம் எனது உறவுகளுக்கு ஒரு அருங்கொடை என்றே சொல்லலாம்.

சரி..'தென்மர்' பத்திரிகை வாசகர்களே.. என்னைப் பேட்டிகண்ட இப்பத்திரிகையின் பிரதான ஆசிரியர் திரு. துரைசிங்கம் (பாரிஸ்) அவர்களுக்குப் பெரு நன்றிகள். இதை வாசித்த அனைவருக்கும் வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்...

அனைவரும் அனைத்தும் பெற வாழ்துகிறேன்!.. நன்றியுடன்!..

**வைரமுத்து சிவராசா - யேர்மனி**
**பிரதம ஆசிரியர் 'மண்' கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை - 01.10.2021**




**மாணவர்களிடையே எழுத்தாற்றலை தூண்டும் வகையில் 'மாணவர் முற்றம்' என்னும் பகுதியை தென்மர் ஆரம்பித்துள்ளது.**
**உங்கள் ஆக்கங்களும் இப்பகுதியில் இடம்பெற வேண்டும் என விரும்புபவர்கள் கவிதை, கட்டுரை, துணுக்குகள், சிறுகதை என்பவற்றை எழுதி எமக்கு அனுப்பி வைக்கலாம். ஆக்கங்கள் சொந்தமாக இருத்தல் வேண்டும்.**

**பெயர், பாடசாலை, கல்வித்தரம் போன்றவற்றை குறிப்பிட்டு தென்மர் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.**

**மின்னஞ்சல் முகவரி :-**
**thenmar66gmail.com**

**(மாணவர்முற்றம் அரைப்பக்கத்திற்கு பிரசுரிக்கப் படவுள்ளதால் அதற்கேற்ப தங்கள் படைப்புகளை அனுப்பி வைக்கவும்.)**

## பெண் தலைமைத்துவம்; ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம ஆசிரியர் துரைசிங்கம் ஆகியோர் நிகழ்விலே கலந்து கொண்டனர். திரு முகுந்தராஜ் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது -

கடந்து போன யுத்தம் மற்றும் பல காரணங்களால் தாயகத்தில் பலரின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது இதனை நிவர்த்தி செய்யும் வகையில் புலம் பெயர் உறவுகள் தனித்து, கூட்டாக அமைப்புகள் ஊடாக செயற்பட்டாலும் வாழ்வாதாரம் உயரவில்லை. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு கை கொடுப்பதன் மூலமே நம்மவர் பொருளாதாரத்தை உயர்த்த முடியும்என்றார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி ஒன்றியத்தின் பிரான்ஸ் கிளைக்கான நிர்வாகமும் தெரிவுசெய்யப்பட்டது. தலைவர் கு. உதயகுமார், உபதலைவர் போட்டோ பாலா, செயலாளர், துரைசிங்கம், உபசெயலாளர் திருமதி எம். செல்வராணி, பொருளாளர் க. சுபாஸ், முதன்மை உறுப்பினர்கள் முகுந்தராஜ், குணாளன்.

## சாவகச்சேரி மின்மயானம்; .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான மதிப்பீடு ரூபா 23 மில்லியன் செலவாகும். இதன் ஆரம்ப வேலையாக தகன அறையினை நிர்மாணிக்க ரூபா 13 மில்லியன் செலவாகும் எனவே இதற்கான நிதி வழங்கி உதவுமாறு சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் சிவமங்கை இராமநாதன் புலம்பெயர் தென்மராட்சி அமைப்புகளிடம் வேண்டுகோள். விடுத்துள்ளார்.

## ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் ........


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 வயதில் ஒஸ்லோ மாநகர சபை தேர்தலில் தொழிற்கட்சி சார்பாக நிறுத்தப்பட்டார். 19 வயதில் நோர்வே மாநகர சபை உறுப்பினர். 21 வயதில் நோர்வே தொழிற்கட்சி இளையோர் அமைப்பின் தலைவர் .2014 தொழிற்கட்சியின் ஒஸ்லோ. கிளை துணைத்தலைவர் பதவி என நோர்வே அரசியலில் தவிர்க்க முடியாத பெயராக ஹம்சி விளங்கினார். 2015 தொழிற்கட்சி ஒஸ்லோ மாநகர சபையில் அமர்ந்த போது ஹம்சி அதன் துணை முதல்வரானார்.

அவரின் தற்போதைய தேர்தல் வெற்றி நோர்வேயில் மட்டுமல்ல ஐரோப்பாவை பொறுத்த வரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது .இலங்கையில் பிறந்த ஒருவர் ஐரோப்பிய நாடு ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினராக வருவது இதுவே முதல் தடவை என நோர்வே ஆய்வாளர் திரு. விஜயேந்திரன் தெரிவித்துள்ளார்.

நோர்வே நாடாளுமன்ற 169 ஆசனங்களில் அமரவுள்ள உறுப்பினர்களில் பதினொரு பேர் வெளிநாட்டு பூர்வீகத்தை கொண்டவர்கள் அவர்களில் ஒருவர் தமிழர் என்ற வரலாறு ஹம்சியால் எழுதப்பட்டிருக்கிறது என்றும் அவர் வர்ணித்துள்ளார்.

# சொல்லேருழவர்





## தொலைபேசி.....

சுட்டிப்பிள்ளையும்
குட்டி நாயுமாய் எம்மில் ஒட்டிக்கொண்டது
தொலைபேசி.
எட்டி இருக்கவும்
எழுந்து நடக்கவும்
விட்டு விடாமல்
காலை சுற்றிப்பிடிக்குது
கைபேசி.
இரகசியம் பேண
முடியவில்லை
இராத்திரிப்பகலாய் தூக்கம்மில்லை.
ஏம சாமத்திலும்
தூக்கச்சொல்லி
இரு கைகளில் தவளுது தொலைபேசி
சட்டை பையிலே உறங்கிக்கிடக்குது
சகட்டு மேனியாய் அலறித்துடிக்குது .

உள்ளூர் செய்தியையும்
உரைத்து பேசுது.
உலகச்செய்தியையும் எடுத்துக்காட்டுது
வர்த்தகம் முதலாய் வரலாறுவரைக்கும்
சரித்திரம் யாவையும்
முறைப்படி பேசுது. மருத்துவத்தோடு
வானிலை அறிக்கையும்
சாத்திரம் முதலாய்
சமகால நிகழ்வுகள் யாவும் உள்ளதை உள்ளபடி
படம் பிடித்து காட்டுது.
உருவத்தில் சிறுசு தான்
உள்ளங்கை அளவு தான்
உள்ளடங்கிய செய்திகள்
உலகத்தில் பெரியது.

சன்னியாசி ஆனவனுக்கும் கன்னிராசி போலாச்சு
சன்னி பிடித்தவன்போல்
சனி பிடித்து ஆட்டும்
ஆயிரம் வலைத்தளங்கள்.
படித்தவர் முதலாய்
பாமரர் வரைக்கும்
பிடித்தமானது செல்போன்.
பிள்ளைகள் நெஞ்சை
பிஞ்சிலே கிள்ளி
பொல்லாத வினைக்குள் வீழ்த்துது.
அவர் எண்ணத்தை
தன்பால் இழுக்குது.
இதில் நல்லதும் உண்டு
கெட்டதும் உண்டு
அவரவர் தேவை
அவரவர் பொறுப்பு.

உலகம் சுருங்கி
உள்ளங்கையாச்சு
தொடர்புகள் தேடல்கள் நொடிப்பொழுதாச்சு
வானுக்கும் பூமிக்கும் இறுக்கம்முண்டாச்சு
வான்கூரை உடைந்திங்கு செங்கதிர் வீழ்ந்தது
தரை கடல் காடெல்லாம் வறண்டிங்குபோனது
தொழில் நுட்பவளர்ந்ததால்
உலகம் சுடுகாடாய்ப்போனது.
ஒவ்வொரு மனிதனும் தனக்கொரு உலகம்
தனிமையில் இனிமை
காணும் கொடூரம்
வாழ்க்கையின் சுமையை இலகுபடுத்தி
இலவாய்ப்போனது
எதிர்காலம்.

● வேலன்

## தமிழ்.....

தாய் என்றோம்
தமிழ் என்றோம்
தமிழே எங்கள்
உயிர் என்றோம்
வாழ்வென்றோம்
வளமென்றோம்
வாழ்வில் கிடைத்த
வரம் என்றோம்.

இசை என்றோம்
ஒலி என்றோம்
ஒளியுமாகிய இறை
என்றோம் மறையென்றோம்
பொருள் என்றோம்
மர்மம் நிறைந்த
வாழ்வென்றோம்.

தேன் என்றோம் திணையென்றோம்
திகட்டா அறுசுவை கனியென்றோம்
ஈசன் சுவைத்த அமுதென்றோம்
தமிழ் அறமே எங்கள் வழி என்றோம்.

அண்டத்துள் அணுவாகி
அணு தீண்டி கதிராகி
கதிர் முத்திப்பிழம்பாகி
காற்றாற்ற கல்லாகி
அனல் வெம்பி நீராகி
நிலம் வந்து உருவாக்கி
உயிர் தோன்றும்போதே
உடன் தோன்றிய தமிழே
நீ எங்கள் உயிரே....



● ராஜ்

## வாராது வந்த வம்சி - தமிழ் தாராது தந்த கம்சி!

தோன்று புகழின் தொல்குடிப் பிறந்து - நாட்டை
மூன்று வயதில் முனிவொடு துறந்து
நள்ளிரவுச் சூரிய நாட்டிடை வந்து
துள்ளித் திரிந்தாய் அது ஒரு காலம்!

இன்று ..
புகுந்த நாட்டின் புரட்சிப் பெண்ணாய்
மிகுந்த புகழொடு மிளர்கிறாய் கண்ணாய்!

முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் எம்மறத்தின்
வித்தாக விளைந்தவளே தமிழை விக்காத பெருமகளே - நீ
யாதும் ஊரே யாவரும் கேளிரென
வாதும் செய்வாய் வாஞ்சையும் கொள்வாய்!

வெற்றிக்காக உழைக்காத வேற்றாள் தம்மைப்
பற்றியும் சிந்திக்கும் பான்மை நின்னது;
அனைத்து மக்களும் அன்பொடு உன்னை
அணைத்து மகிழும் ஆளுமை அன்னது!

நோர்வே நாடும்; நோதலில் வாழும்
எம்மவர் பாடும்; ஏற்றம் பெறுக! - பெண்ணைப்
பதுமை என்ற பழங்கதை மாற்றிப்
புதுமைப் பெண்ணாய்ப் பெருஞ்செயல் புரிக!

அளவில் பதவிகள் இளவயதில் வந்தன;
அடுத்தது என்ன அமைச்சர் தாமே?
எடுத்ததை முடிக்கும் உந்தன் ஆளுமையைத்
தடுத்திடல் யார்க்கும் தகையல அறிக!

● நவாஸ்


# கல்விக்கு கைகொடுப்போம்

க.பொ.த. (உ/த) 2022 மாணவர்களுக்கான புலமைப்பரிசில்
விண்ணப்ப படிவம் அடுத்த இதழில் பிரசுரமாகும்.
அவ் விண்ணப்ப படிவத்தை தங்கள் பாடசாலை அதிபரிடம் பெற்று
பூரணப்படுத்தி ஒப்படைக்கவும்.

தொடர்புகளுக்கு -

1) சர்வதேச இணைப்பாளர்
திரு. இரா சத்தியசீலன்
தொ.இல:- 1 - 416 833 7299
Whatapp / Viber - 4168337299

2. மக்கள் தொடர்பாளர் தென்மராட்சி
திருமதி. தேவரதி சுதேஸ்கரன்
பிரதி அதிபர்
யா/ டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி
தொ.இல:- 077 9672960

3. கல்விப் பொறுப்பாளர் தென்மராட்சி
திரு. செ.பேரின்பநாதன்
அதிபர்
யா/ டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி
தொ.இல:- 077 616 5573

4. கல்விப் பொறுப்பாளர்
திரு.வை.சிவராசா
தொ.இல:- 4915254799233

"சமூக மேம்பாடே எமது இலக்கு"




# மாணவர்களின் இன்றைய பார்வையில் ஆசிரியர்கள்



ஆக்கம் :- செல்வி. செ. தாரணி
யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.

"வெள்ளத்தால் அழியாது வெண் தணழால் வேகாது" வேந்தராலுங் கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கோ மிக எளிது கல்வியென்னும் உள்ளத்தே பொருளிருக்கும் புறம்பாகப் பொருள் தேடி யுழல்கின்றாரே கல்வியின் சிறப்பைப் பற்றிக் கூறக்கூடிய மிகச் சிறந்த பாடல் இதைத் தவிர வேறு இருக்க முடியாது. இத்தகைய சிறப்பு மிக்க கல்விச் செல்வத்தை நமக்கு அள்ளித் தருகின்றவர்கள் ஆசிரியத் தெய்வங்களோ ஆவார்கள். மாதாவிற்கும் பிதாவிற்கும் அடுத்த நிலையில் அன்று போற்றப்பட்ட ஆசான்கள் இன்று மாணவர்களின் பார்வையில் அலட்சியப்படுத்தப் படுவதையே எம்மால் நோக்க முடிகின்றது.

உலகில் காணப்படும் அனைத்து தொழில்களிலும் மேலான தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒரு தொழிலாக ஆசிரியத் தொழில் காணப்படுகின்றது. மற்றைய தொழில் துறையினரைக் காட்டிலும் அதிகமான பொறுப்பும் முக்கியத்துவமும் வாய்ந்தவர்களாக இந்த ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். பெற்றோர் குழந்தையை உலகிற்கு தருகின்றனர். ஆனால் ஒரு நல்ல ஆசான் அந்த உலகையே குழந்தைக்கு வழங்குபவர்களாக காணப்படுகின்றனர். நான் உயிருடன் இருப்பதற்கு என் தற்தைக்கு கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் இப் பூமியில் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்கு கடமைப்பட்டிருக்கிறேன் என்ற அலெக்ஸாண்டரின் கருத்தும் இதனையே பறைசாற்றி நிற்கின்றது.

ஒரு பிள்ளை பிறந்ததிலிருந்து ஐந்து அல்லது ஆறு வயது வரைக்கும் பெற்றோரின் வழிகாட்டலில் வளர்கின்றனர். அடுத்ததாக பாடசாலைக் கல்வி தொடக்கம் உயர் கல்வி வரைக்கும் அப்பிள்ளையை வழிநடத்தும் ஒரு நபராக ஆசிரியர்களே விளங்குகின்றனர். இன்றைய நிலையில் பெற்றோர்களின் அன்பானது பெரும்பாலான பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. காரணம் நவீன உலகில் பெற்றோர் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்து, ஓடி ஓடி உழைக்கின்றனர். அதனால் பிள்ளைகள் மீது அவர்களால் அன்பு காட்ட முடியாத சூழல் உருவாகின்றது. இவ்வேளையில் பிள்ளையின் மனநிலை நன்கு அறிந்து "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பதற்கு ஏற்ப தன் மாணவன் மீது அன்பு செலுத்தி நற்பிரஜையாக உருவாக்குகின்றார்கள். இதனை புரிந்து கொள்ளாத மாணவர்களின் பார்வையில் ஆசிரியர்கள் அலட்சியவாதிகளாக தோன்றுகின்றனர்.

ஆசிரியரின் ஒவ்வொரு கண்டிப்பும் தன்னுடைய வளர்ச்சிக்காக என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ளும் பக்குவத்தை வளர்ப்பது நம் அனைவரினதும் கடமையாகும். வகுப்பறையில் ஓர் ஆசிரியர் 'நான் அடுத்த மாதம் ஒய்வு பெறப் போகிறேன்.' இது இறந்த காலமா? நிகழ்காலமா? எதிர்காலமா? என வினவ ஒரு மாணவன் எங்களுக்கு விடிவு காலம் எனக் கூறுகின்றான். இது மாணவர்களின் இன்றைய பார்வையில் ஆசிரியர்கள் அலட்சியப்படுத்தப்படுவதை தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

ஆசான் மாணாக்கர் உறவு என்பது ஆரம்பகால குருகுலக்கல்வி தொடக்கம் இன்றைய காலம் வரையிலும் ஓரளவிற்கு பின்பற்றப்பட்டு வரும் ஒரு புனிதமான உறவாகும். அக்காலத்தில் மாணவர்கள் குருவின் இடத்திற்கு சென்று தங்கியிருந்து அவருடன் நெருக்கமான உறவை பின்பற்றி வித்தைகள், கல்வி, ஒழுக்க விழுமியங்களைப் பயின்றனர். இது குறிப்பாக அரசாட்சிக் காலத்தில் பெரிதும் நடைமுறையில் காணப்பட்டது. மகா பாரத கதையின் படி தன் குருவிற்கு ஏகலைவன் பெருவிரலையே தட்சணையாக அளித்தான். இவ்வாறு அக்காலத்தில் குரு சிஷ்யன் உறவுமுறை நெருக்கமாக காணப்பட்டமையை அறியலாம். இது கால ஓட்டத்தில் திண்ணைக் கல்வி முறையாகவும் பின்னர் பாடசாலைக் கல்வி முறையாகவும் மாற்றப்பட்டுள்ளதை காணமுடிகின்றது.



நிறுவனமயப்படுத்தப்பட்ட பாடசாலைக் கல்வி முறைமை உருவானதன் பின்னர் புதிய பல சாதனைகள் படைக்கப்பட்டது. குறிப்பாக மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலான போட்டிப் பரீட்சைகள் மற்றும் விளையாட்டக்கள் என நடாதப்பட்டு மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் அத்துடன் மாணவர்களி மனங்களில் புதிய சிந்தனைகள் ஊற்றெடுத்து கல்வியின் பால் ஈர்க்கப்பட்டமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

ஆனால் இன்று அந்த நிலை மாற்றங்கண்டுள்ளது. அதாவது பெரும்பாலான மாணவர்கள் சினிமாவிற்கு அடிமையாகி அதில் வரும் கதாபாத்திரங்களாக தம்மைக் கற்பனை செய்து கொள்வதும் காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் காதல் வலைக்குள் சிக்குவதும் அதுதான் இன்பம் என்றும் வேறு எதுவுமே பெரிதல்ல என கருதி அதற்கும் அடிமையாகி தமது வாழ்வையே சீரழிப்பதை கண்டு ஆசிரியர்கள் திருத்த முற்படுகின்றபோது மாணவர்களின் பார்வையில் ஆசிரியர்கள் எதிரிகளாகத் தெரிகின்றனர்.

ஒரு ஆசிரியர் கண்டிக்கும்போது அதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மாணவர்களுள் பெரும்பாலானோருக்கு இன்று இல்லை. அத்துடன் மாணவர்கள் பொதுவாக போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களாக மாறும்போது ஆசிரியர்கள் அதனை தடுக்க முற்படுகின்றார்கள் அது மாணவர்களுக்கு தவறான செயற்பாடாகவே தெரிகின்றது. "மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் இடவேண்டும் மாற்றுக்குறையாத மன்னன் இவன் என்று போற்றிப் புகழ்பாட வேண்டும் என்று கனவு காணும் ஓர் ஆசிரியர் தன் மாணவனின் எதிர்காலம் தன் கண்முன்னே கருகுவதைக் கண்டு கொதித்தெழுகின்றார். இவ்வாறான ஆசான்களின் நற்செயற்பாடுகள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான உறவு நிலையில் பாரிய விரிசல் தோற்று விக்கின்றது.

மேலும் நோக்குகின்றபோது ஆசிரியர்கள் மாணவர்கள் பரீட்சையில் உயர்ந்த பெறுபேற்றை பெறவேண்டும் என்பதற்காக தினமும் பரீட்சைகளை நடத்துவதும் கேள்விகளைக் கேட்பதும் என்று தம்மையே தியாகம் செய்து மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்ற முற்படுகின்றார்கள். ஆனால் இதனை புரிந்து கொள்ளாத சிலர் ஆசிரியர்களை அவமதித்து பேசுவதும் அவர்களுக்கு பட்டப்பெயர்கள் சூட்டுவதும் என்று கீழ்த்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அதுமட்டுமன்றி ஒரு ஆசிரியர் மாணவர்களை பொதுப் போட்டிகளிற்கு தயார்ப்படுத்துகின்றபோது மாணவர்களின் பார்வையில் ஆசிரியர் கள் வேலையற்றவர்களாகத் தென்படுகின்றனர். குறிப்பாக மாணவன் போட்டி யில் பங்கு பற்றுவதானது சமுதாயத்தில் தான் நிலை கொண்டு வாழ்வதற்கு ஆயர்த்தப்படுத்தப்படுகின்றான் என்பதே அதன் பொருளாகும். ஆனால் இதனை மாணவர்கள் சிலர் இன்னும் முற்றாக உணர்ந்து கொள்ளவில்லை.

மாணவர்களின் இன்றைய பார்வையில் ஆசிரியர்கள் அலட்சியப்படுத்தப்படுவதற்கு வெறுமனே பிள்ளைகளை மட்டும் குறை கூற முடியாது. அதாவது சில ஆசிரியர்களின் தவறுகளும் காரணமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ஆசிரியர் நான் என்னும் ஆணவத்துடன் தான் மட்டும் வகுப்பறையில் பேசுதல், மற்றும் கல்வியில் மட்டும் கவனத்தை செலுத்துமாறும் ஏனைய இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் பங்கு கொள்வதை தடுத்தல் போன்றனவும் காரணமாக அமைவதை நாம் முற்று முழுதாக மறுக்கவோ மறைக்கவோ முற்படுவது என்பது தவறாகும். இவ்வாறான தவறுகளை சில ஆசிரியர்கள் செய்கின்ற போது அது ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் பாதிக்கிறது.

எது எவ்வாறாக இருந்தாலும் 'ஒரு கை மட்டும் தட்டி ஓசை எழ முடியாது' என்ற உண்மைத் தத்துவத்தை மாணவர்களும் ஆசிரியர்களும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக பிள்ளைகளின் இன்றைய பார்வையில் ஆசிரியர்கள் அலட்சியப்படுத்தப்படுகின்ற எண்ணம் முற்று முழுதாக மாற்றமடைய வேண்டும். எந்தவொரு ஆசிரியரும் நம்மை கண்டிப்பதும் தண்டிப்பதும் எமது எதிர்காலம் சிறப்புற அமைவதற்காகவோ நல்ல ஆசான் நம்மை வருத்துவது கொல்ல வல்ல கொல்லவல்ல....." என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்கால வாழ்வில் மாணாக்கர்கள் ஆகிய நாம் சிறந்த சிற்பியாக இவ்வுலகில் வாழவேண்டுமானால் ஆசிரியர்களை தெய்வமாகப் போற்ற வேண்டும் அது மட்டுமன்றி பிளேட்டோ என்ற குரு இல்லாவிட்டால் அரிஸ்ரோட்டில் என்ற மாமனிதர் எமக்கு கிடைத்திருக்க முடியாது என்பதை உணர்ந்து மாணவர்களின் இன்றைய பார்வையில் ஆசிரியர்கள் அலட்சியப்படுத்தப்படாமல் தெய்வமாகப் போற்றப்படும்போது மாணவர்கள், நாளைய வாழ்வில் வானைத் தொடும் புகழை அடைவார்கள் என்பது திண்ணமாகும்.

---

# குற்றம் கூறும் சுற்றம் ...

தவித்த வாய் தண்ணீர் தராது சாகவும் விட்டுவிடாது
போகின்ற பாதையை வழிமறைக்கும்
ஏன் என்று அறியாமல் குழிபறிக்கும்.
வாழவும் சுகமாய் விட்டுவிடாது
சாகவும் எளிதில் விட்டுவிடாது.
அடுத்தவன் குறையையே ஆராயும் மனிதர்
தகனத்தீ அள்ளி சுட்டு விடும்.
தன்னை ஞானியென்று கொள்பவர்
தனக்கென ஏதும் வந்துவிட்டால்
ஒப்பனை சொல்லி ஒப்பாரி வைக்கும்.

வாழ்ந்துகெட்டு போனவனை வக்கனை பேசும்.
வாழத்துடிப்பவனை மண் அள்ளித்தூற்றும்
நடந்தாலும் குற்றம் நின்றாலும் குற்றம் வாழும்
காலத்தில் வாழ்த்தாக சனம்
செத்தபின் பிணம் முன் கண்ணீர் வடிக்கும்.
இழிச்சொல் சொல்லியே காலத்தைக்கழிக்கும்
நரிகளுக்கு இங்கு
பஞ்சம் இல்லை காணும் கிடவான்
தன்னியும் இருக்கான் என்பது
இன்றைய பொதுச்சிந்தனை
வாழ்த்தவும் மனமில்லை வளர்க்கவும் துணிவில்லை
தன் நிலை மறைந்தவர் ஆயிரம்

நல்லது கெட்டது நாளும் தெரிந்தவர்
நாலுபேர் இருப்பினும் உள்ளது சொல்ல
உள் நெஞ்சு விடாது, வெள்ளையும் சொள்ளையுமாய்
வெளிச்சத்தில் நடந்தாலும் உள் மனம் என்னவோ
இருட்டாகிப்போனது தான் என்பதே
தலைதூக்கிக்கொண்டதால்
யார் எவர் ஆயினும் அவர் சொல் மந்தமே


ஒப்பாரியும் சொல்லார்
ஒப்புக்கு அலார்
மதில்மேல் பூனையாய் இருப்பவர் பாவம்
அவர் செத்தாலும் ஒன்றுதான் வாழ்ந்தாலும் ஒன்றுதான்.
அவர்கள் பிறப்பெடுத்த பேய்கள் வெந்ததை தின்று
கண்டதை பார்த்து
காலத்தை கழித்தபின்
கடைசியில் கைலாயம் போகத்துடிக்கும்
எமக்கு எதற்கிந்த வாழ்க்கை

- வேலுப்பிள்ளை புவிராஜ் -



சு.சிவானந்தன்
அதிபர்
யா/ மீசாலை விக்கினேஸ்வர
மகா வித்தியாலயம்.
தென்மராட்சி.

# மனப்பாங்கு விருத்தியினை வலுப்படுத்துவதன் அவசியம்




ஒரு மனிதனது எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கிய தொகுதியே மனப்பாங்காகும். எமது நாட்டில் நேர்மறையான மனப்பாங்கை கட்டியெழுப்ப நாடு பூராகவும் ஆயிரக் கணக்கான கல்வி கூடங்கள் இருந்தபோதிலும் புறக் காரணிகளின் தாக்கம் பெரும் தடையை ஏற்படுத்தி வருகின்றது.

இந்தப் புறக்காரணிகளின் ஆதிக்கத்தைக் குறைத்து நேர் மறையான மனப்பாங்கினை வலுவாக கட்டியெழுப்புவதன் ஊடாக ஒரு தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய சட்டதிட்டத்தை மதிக்கின்ற, கலாசார பல்வகைமைகளை மதிக்கின்ற, நல்ல மானிடப் பண்பு கொண்ட சூழலை நேசிக்கின்ற, நேர் மனப்பாங்குடன் சிந்திக்கக் கூடிய ஏனையோரின் உரிமைகளை மதிக்கின்ற, நாட்டு அரசியலை விளங்கிக் கொள்கின்ற எவருக்கும் தீங்கு செய்யாத சமூகத்தில் நிலவும் சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய நற்பிரசைகளை உருவாக்க மனப்பாங்கினை கட்டியெழுப்புவது மிகவும் அவசியமாக உள்ளது.

ஒரு மனிதனது எண்ணங்கள், சிந்தனைகள், கருத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கிய தொகுதியே மனப்பாங்காகும். இம் மனப்பாங்கானது ஒருவனை இயக்கும் சக்தி என்றே கூறலாம். நடத்தைகள் அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியே இம் மனப்பாங்காகும். நேர்மறையான மற்றும் எதிர் மறையான சிந்தனைகள் ஒருவனுள் தோற்றுவித்து ஒன்றில் சமூகத்துக்கு நன்மை பயக்கும் நபராக அல்லது தீங்கு பயக்கும் நபராக மாற்றியமைத்தலில் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றது. ஒருவரது மனப்பாங்கினைத் தீர்மானிப்பதில் புறக் காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அதே போன்று புற நபர்கள் கூட இம் மனப்பாங்கு உருவாக்கத்தில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றனர். மனப்பாங்கின் பாதிப்பு அல்லது உணர்ச்சி கூறனாது மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாகவும் அதே நேரம் கட்டுப்படுத்துவது படிப்படியானதாகவும் காணப்படுகின்றது.

மனப்பாங்கு என்பதற்கு கொக் மற்றும் வோகன் (Hogg & Vaughan - 2005) மனப்பாங்கு என்பது சமூக முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள், குழுக்கள், நிகழ்வுகள் அல்லது சிந்தனைப் போக்குகளின் நீடித்த அமைப்பு என வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர். இவ் எண்ணக் கருவானது ஒவ்வொரு தனியன்களினதும் மனநிலையினைக் குறிக்கின்றது. இம் மன நிலையானது ஒருவரது நம்பிக்கைகள், பெறுமானம் மனவெழுச்சிகள் மற்றும் போக்கு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு குறித்ததொரு வழியில் இயங்குவதாகும்.

மனப்பாங்கானது ஒரு பொருள் அல்லது நிகழ்வு



அல்லது ஒரு நபர் குறித்தான பார்வை, மனநிலை, நம்பிக்கைகள் என்பவற்றை குறிப்பதாக அறியப்படுகின்றது. இது மூன்று பிரதான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை

01. பாதிப்பு உணர்ச்சிக் கூறு (Affective Emotional Component)
02. நடத்தைக் கூறு (Behavioral Component)
03. அறிவாற்றல் கூறு (Cognitive Component)

இவை மனப்பாங்கின் ABC மாதிரி (ABC Model) எனவும் அழைக்கப்படுகின்றது.

இங்கு அறிவாற்றல் கூறு என்பது தகவல்கள் அல்லது அறிவினையும், பாதிப்புக்கூறு என்பது உணர்வுகளையும், நடத்தைக்கூறு நாம் செயல்படுகின்ற விதத்தை மனப்பாங்கு எவ்வாறு பாதிக்கின்றது என்பதைப் பிரதிபலிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

கோல்டன் அல்போர்ட் (Golden Alport) மனப்பாங்கானது பின்வரும் ஐந்து வகையான முக்கியத்துவத்தைக் கொண்டது எனக் குறிப்பிடுகின்றார்.

1. மனம் மற்றும் நடப்பு சம்பந்தமானது
2. துலங்குவதற்கு ஆயத்தமாக இருப்பது
3. ஒழுங்கு படுத்தப்பட்டது.
4. அனுபவத்தினூடானது.
5. நடத்தை மீது செல்வாக்கு செலுத்துவது.

மேலும் நேர் மறையான மனப்பாங்கு கொண்ட தனியன்கள் அதிகமான கெட்ட மனிதர்கள், சூழ் நிலைகள் மற்றும் நிகழ்வுகளை விடுத்து நல்ல விடயங்களில் கவனம் செலுத்துவர். இவர்கள் தாம் விடும் தவறுகளையும் சந்திக்கும் தோல்விகளையும் தடைகளாகவன்றி சந்தர்ப்பங்களாக கருதுவர். அதே நேரம் குறித்த தவறுகள் மற்றும் பிழைகளிலிருந்து பல விடயங்களைக் கற்றுக் கொண்டு வாழ்வை முன்னோக்கி நகர்த்துவர்.

நேர் மறையான மனப்பாங்கினை உடைய மனிதர்களில் பொதுவாக கீழ்வரும் நற்பண்புகள் படிப்படியாக கட்டியெழுப்பப்பட்டவர்களாக காணப்படுவர். அவை -

1. மகிழ்ச்சி (Cheerfulness Happines)
2. நம்பிக்கை (Confidence)
3. நேர்மை (Sincerity)
4. பொறுப்புணர்ச்சி (Sense of Responsibitity)
5. நெகிழ்ச்சித் தன்மை (Flexibility)
6. நம்பகத் தன்மை (Reliability)
7. தீர்மானித்தல் (Determination)
8. சகிப்புத்தன்மை (Tolerance)
9. பணிவு (Humility)
10. ஏற்க விருப்புதல் (Willingness Adapt)
11. விடா முயற்சி (Diligence)

இன்று சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய, வேலை உலகக்குப் பங்களிப்புச் செய்யக் கூடிய வருங்கால பிரசைகளை உருவாக்கும் பொறுப்பு நம் நாட்டில் கல்வி வழங்கும் நிறுவனங்களின் கையில் மட்டும் பொறுப்பளிக்கப்பட்டு இருப்பதை காணலாம். அவ்வாறு உருவாக்கப்படும் நபர் அல்லது மனிதன் கீழ் வரும் நடத்தை அல்லது மனப்பங்குகளை தன்னகத்தே கொண்டவராக திகழ வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

01. எமது நாட்டிலும் உலக நாடுகளிலும், உள்ள பல கலாசார சமூகத்தில் வாழக் கூடியவர்களாகவும், சமூக பல் வகைமைகளை மதிப்பவர்களாகவும் இருத்தல்.

02. தீர்மானம் எடுத்தலில் ஜனநாயக வாதியாக திகழ்தல்.

03. உள்ளார்ந்த மன அமைதியைத் தேடிக் கொள்பவராக இருத்தல்.

04. ஏனையவர்களது உரிமைகளைப் பாதுகாத்து அவற்றுக்கு மதிப்பளிப்பவராக இருத்தல்.

05. தமது நாடு பற்றியும், உலக நாடுகளைப் பற்றியும் அரசியல் விளக்கம் தெரிந்தவராக இருத்தல்.

06. குற்றம் மற்றவர்களாக லஞ்சம் பெறாதவர்களாக எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி அடுத்தவர்களுக்கு பணி புரியக் கூடியவர்களாகி இருத்தல்

07. சூழல் நேயம் மிக்கவராக இருத்தல்.

08. உலககளாவிய தொலை நோக்குப் பார்வை கொண்ட அகில உலகப் பிரஜையாக திகழ்தல்.

09. தமது எண்ணத்திலும் செயலிலும் எவருக்கும் தீங்கு செய்யாதவர்களாக இருத்தல்.

10. ஒவ்வொருடைய மொழியிலும் கருத்துக்களைப் பரிமாற்றுபவானவும், அவற்றுக்கு செவிமடுப்பவராகவும் இருத்தல்.

11. பல கலாச்சாரம் உள்ள சூழலில் உள்ள சவால்களை வெற்றி கொள்ளக் கூடியதாக இருத்தல்.

12. எந்த விடயத்தையும் நேர் கணியமாக சிந்திக்கக் கூடியவராக இருத்தல்.

13. இலங்கை நாட்டிற்குரிய சம்பிரதாயம், கலாசாரம், விழுமியங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் இயலுமையை கொண்டிருத்தல்.

14. சட்ட திட்டங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் அப்பால் மேலதிக குணநலன்களைக் கொண்டவராக இருத்தல்.

இருந்த போதிலும் இலங்கையில் கல்வி வழங்கும் நிறுவனத் தரப்பினர்கள் நேர்மறையான மனப்பாங்கு விருத்தியினை செய்ய பல வழிகளில் முயற்சி செய்து வருகின்றபோதிலும் பொருளாதார மற்றும் தொழில்கள் கூட மனப்பாங்கு வடிவமைப்பில் பங்களிப்பு செய்கின்றது. நிகழ்கால மற்றும் எதிர்கால மனப் பாங்குகளைத் தீர்மானிக்கும் சக்தியாக பொருளாதாரப் பின்னணி காணப்படுகின்றது. அவை தவிர சமூக மயமாக்கம், சமூகக் கற்றல், பிறருடைய செல்வாக்கு, சூழல், அறிவு, ஆளுமை, மனித சிந்தனை மற்றும் உணர்வுகள் போன்றவற்றினையும் மனப்பாங்கில் செல்வாக்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கொள்ளப்படுகின்றது.

அதே போன்று மனப் பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தபவர்களாக,



1. நண்பர்கள்
2. அரசியல் தலைவர்கள்
3. மதத் தலைவர்கள்
4. ஆசிரியர்கள்
5. பெற்றோர்கள்
6. திரைப்படங்கள்
7. விளம்பர நடிகர்கள்
8. சமூக ஊடக உரிமையாளர்கள்

நேர்மறை மனப்பாங்கு விருத்தி செய்வதில் பல தசாப்த காலமாக இலங்கையில் கல்வி வழங்கும் நிறுவனங்கள் தொடர்ச்சியாக முயற்சி எடுத்து வருகின்ற போதிலும் புறக் காரணிகளின் தாக்கம் காரணமாக புதிய, புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதுடன் பொருளாதாரப் பின்னணியோடு ஏனைய புறக் காரணிகளுடன் நண்பர்கள் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், பெற்றோர்கள், திரைப்படங்கள், விளம்பர நடிகர்கள், சமூக ஊடாக உரிமையாளர்களில் செல்வாக்கு தனிநபர்களின் எதிர்மறையான மனப்பாங்கை விதைப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றமை நேர் மறையான மனப்பாங்கு விருத்தி மேலும் பின்னடைவினையே ஏற்படுத்தும். இதன் காரணமாக தொழில் உலகு மற்றும் சமூகம் எதிர்பார்க்கும் நேர்மறையான மனப்பாங்கு விருத்தி ஊடாக பெற்றுக் கொண்டிருக்கும் மென்திறன்கள், வன்திறன்கள் இவர்களது எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் பூரணமாக இல்லாது இருப்பதுடன் இதனையே கடந்த கால நிகழ்கால நிலைமைகள் தெளிவாக எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. *

# இரும்புக் கட்டுமான இளந்தொழில் முனைவர்

வணிக தொழிற்துறை மற்றும் வீட்டுமனை கட்டடங்களுக்குத் தேவையான இரும்புத் தூண்கள் (Steel Columns), உத்திரச் சட்டங்கள் (Steel Beams), மற்றும் இரும் பினாலான பலதரப்பட்ட இதர கட்டட வேலைகளை (Miscellaneous Steel Works) குறைந்த செலவில் உயர்ந்த தரத்தில் வேகமாகவும் காலந்தவறாதும் முடித்துக் கொடுக்கும் கடின பணியை மேற்கொண்டு கனடாவில் இயங்கி வரும் நிறுவனம் Times Iron Works.

இங்கு ஹம்பர் கல்லூரியில் கட்டுமான துறையில் பாடங் களைத் தேர்ந்தெடுத்துப் படித்ததோடு ஆர்வம் காரணமாக இத் துறைப் பயிற்சி நாடி பல நிறுவனங்களில் இரவில் வேலை, பகலில் கல்வி என மூன்று ஆண்டுகள் வரை தொடர்ந்து இறுதியில் Project Manager ஆக வேலைத்தரத்தை உயர்த்திக் கொண்டார்.

இந்தத் தொழிலகத்தின் நிறுவனராகவும், தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றி வருபவர் தாஸ்ஷன் என அறியப்பட்ட இளந்தொழில் முனைவர் தேவதாஸ் சண்முகலிங்கம். ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஸ்ரோவில் மேற்குப் பகுதியில் விஸ்தீரணமான பரப்பளவுள்ள சொந்த இடத்தில் இந்தக் கட்டுமானத் தொழிலகம் (Structural Steel Industry) அமைந்துள்ளது.

ஒன்ராறியோவின் பெரும் கட்டுமான நிறுவனங்கள் இவரது நிறுவனத்தின் உயரிய தொழில்நுட்பச் சேவை தரம் அறிந்து இவரை நேரடியாக அணுக ஆரம்பித்தன. குறிப்பாக, ரொறன்ரோ நகர சபையின் பல்வேறு இரும்புக்கட்டுமான ஒப்பந்தங்கள் TTC, GO நிறுவனங்களின் இரும்பக்கட்டுமான ஒப்பந்தங்கள், அத்துடன் இவரது நிறுவனம் கையாண்ட LCBO கட்டடங்கள், ஹொக்கி விளையாட்டுப் போன்ற பிரமாண்ட மைதானங்களுக்கான அரங்குகள், தீயணைப்புப் படை கட்டடங்கள், அவசரகால மருத்துவ சேவை நிலைய கட்டடங்கள் என்பவற்றின் இரும்புக் கட்டுமான தரம் பரிசீலிக்கப்பட்டதன் பெறுபேறாக முன்னுரிமைப் பத்திரம் பெற்ற நிறுவனமாக இது வளர்ந்து நிற்கிறது.

2005ஆம் ஆண்டு பிக்கரிங்கில் ஆரம்பிக்கப்பட்ட இந் நிறுவனம் பின்னர் ஸ்ரோவிலுக்கு சொந்தமான காணிக்கு இடம் மாறியது.

இயல்பாகவே பொறியியல் துறையில் இவருக்கிருந்த நாட்டம் கனடாவில் சொந்தத் தொழில் தொடங்க ஊக்குவித்தது. அந்த ஆர்வத்தால் முதல் நிலையாக நண்பர் ஒருவருடன் இணைந்து சிறு ஒப்பந்த கட்டுமானத் திட்டங்களை பொறுப்பெடுத்து செய்ய ஆரம்பித்தார். பின்னர் தமது சொந்தத் தொழில் கனவை நிறைவேற்ற Times Iron Works என்ற கட்டுமான இரும்புத் தொழில்நுட்ப நிறுவனத்தை உருவாக்கினார்.

கனடாவில் Fabrication, Supply, Installation and Material Sales ஆகிய நான்கையும் இணைத்துத் தொழில் செய்வதோடு இதற்கான சகல வேலைகளையும் ஒரு கூரையின் கீழ் வைத்திருப்பதாகவிருக்கும் ஈழத்தமிழ் கனடியரின் இத்துறைசார் நிறுவனம் இதுமட்டுமே என்று பெருமையுடன் குறிப்பிடலாம்.



இவர் சமூகநலப் பணிகளிலும் அடக்கமாக ஈடுபட்டு வருகிறார். போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக உதவி வருகிறார். இவரது சமூக நலப் பணிக ளும் நிதியுதவியும் பலவகைப்பட்டது.

இலங்கையில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர். 1991ல் இந்தியா சென்று உயர்கல்வியை முடித்த பின்னர் முதுநிலைக் கல்வியை சென்னையிலுள்ள சத்தியபாமா பொறியியல் கல்லூரியில் ஆரம்பித்தாராயினும், ஒரு கட்டத்தில் பட்டப்படிப்பை தொடர முடியாத நிலை ஏற்பட்டு கனடாவுக்கு குடிபெயர்ந்தார்.

கனடாவில் ஈழத்தமிழர் தொழிற்துறையில் தனித்துவமான ஒருவராக விளங்கும் திரு. தேவதாஸ் சண்முகலிங்கம் அவர்கள் இவ்வருட தமிழர் தகவல் தொழிற்துறை முன்னோடி விருதுடன் தங்கப் பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்பார்.

**கனடா செய்தியாளர்**

---

கிராம அத்தியாயம் 01

# தென்மராட்சி மண்ணில் ஒரு அழகிய கிராமம் “நவபுரம்”

**கைதடி வடக்கின் கரையோரம் - நல்ல**
**களனிகள் சூழ்ந்த திடலோரம்**
**சைவடியாரின் சனக்கூட்டம் - நல்ல**
**சிந்தனையாளர் நடமாட்டம்**
**நவநூல் நிலையம், நாடக மன்றம்**

- இவ்வாறு கிராமத்து உணர்வுகளை தாரக மந்திரமாக உச்சரிக்கும் மக்கள் வாழும் மகத்தான மண் கைதடி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள அழகான பூமி நவபுரம் .

தென்மராட்சி பிரதேசத்தில் கைதடியின் வட திசையில் கிழக்கு பக்கமாக தனிக்கிராமமாக ஏனைய கிராமங்களுடன் குடிசன ரீதியிலான இணைப்பில்லாமலும் சுற்றிய கடல்தரைவெளிகளை கொண்டதுமான எல்லைவிரிந்த சமவெளிகளை கொண்ட கார்கால வெள்ளத்தினால் சூழப்பட்டு ஒரு பருவ காலத்தில் தீவிற்கு ஒப்பாகவும் இன்னொரு பருவகாலம் கோடையில் தரிசு தரவைகளையும் கொண்ட புலம்கள் சூழ் கிராமம் தான் நவபுரம்.

1956 ஆம் ஆண்டு மக்கள் குடியிருப்புக்காக நிலமற்ற மக்களுக்கு அரசினால் முதற்கட்டமாக 32 குடும்பங்களுக்கு 1/2 ஏக்கர் வீதம் வழங்கப்பட்டது. 1961 இல் 21 குடும்பங்கள் குடியமர்ந்தன.

பறட்டைக்காடுகள், கள்ளி, சூரை, காண்டை, முள்செடிகள் நிறைந்த வனமாகவும் தகர்க்க முடியாத கற்பாறைகள் கொண்ட பயன்படுத்த முடியாத நிலமாகவும் போக்குவரத்திற்கு பாதைகள் இல்லாத இடமாகவும் இருந்தது. ஒரு நடைபாதை அப்பாதையிலும் சமனற்ற

கற்பாறைகள் இடர் நிறைந்த நிலையிலும் ஏழ்மையான மக்கள் வேறு மார்க்கமின்றி குடியமர்ந்தனர். இதே ஆண்டில் 1/4 ஏக்கர்(4பரப்பு) வீதம் 44 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. 1965 இல் 41 குடும்பங்கள் குடியேறினார்கள்.

1956ஆம் ஆண்டு கிராம வளர்ச்சிக்குழு உருவாக்கப்பட்டு அங்கு பொதுத்தேவைகளை நிறைவேற்ற விதானையார் மூலம் முயன்றனர். சாவகச்சேரி தொகுதியின் அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினம் அவர்களின் தொடர்பினால் அரசு மானியமாக அனைவரது குடி நிலங்களிலும் வீடுகள் கட்டுவதற்கான அத்திவாரம் இடப்பட்டது.

கிணறுகள் அமைக்கவும் மானியம் வழங்கப்பட்டது. வீடுகள் கட்டி பூர்த்தி செய்யப்பட்டவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டது.

இங்கு வாழும் மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு பிரதான தொழிலாக கொண்டனர்.

லொறி மற்றும் உழவியந்திரம், மாட்டு வண்டிகளில் வெளியூரில் இருந்து வருபவர்களினால் உடைத்த கற்கள் விலை கொடுத்து ஏற்றிச் செல்லப்படும்.

போக்குவரத்து செய்வதற்கு சீரான பாதையில்லை இதனால் 5 கி.மீ.நடந்து சென்று பொதுபோக்குவரத்தில் பயணிக்க வேண் டும். 1960 கார்த்திகை பௌர்ணமி நாளில் பாடசாலை அமைப்பதற்கான கால்கோள் இடப்பட்டது. பனைமர காவலர்ஆசிரியர் திரு க.நடராசா இதற்கு தூண்டுகோலாக இருந்தார். இது தொடர்பான கலந்துரையாடலில் ஆசிரியர் கிருஸ்ணன், ஊர் பெரியார் வைரவி அப்பா, மற்றும் கிராமத்து முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

1961 தை 18 பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. 1963 அரச பாடசாலையாக அங்கிகரிக்கப்பட்டு, எருதிடல் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 9ஆசிரியர்கள் நியமனம் பெற்றார்கள் . இப்பாடசாலையின் தோற்றம் கிராமத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

1965சித்திரை 30 சனசமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கிராமத்து மக்களுடன் நெருக்கமான உறவையும் நட்பையும் கொண்டிருந்த அன்றைய சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினம் அவர்களுக்கு மதிப்பளித்து அவரது பெயரைத்தாங்கி நவசனசமூக நிலையம் என பெயரிடப்பட்டது.

பாடசாலை, சனசமூக நிலையம் போன்றவற்றின் இயங்குதல் மற்றும் செயற்பாடுகளினால் கிராமத்தில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

1978 சித்திரை 26 கிராம அபிவிருத்தி சங்கம் தோற்றுவிக்கப்பட்டு கிராமத்து அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

எருதிடல் என்ற பெயரிலே ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற இக்கிராமத்தின் பெயர் 1978 முதல் கிராமத்து மக்களின் விருப்புக்கும், பொது அமைப்புகளின் கோரிக்கைக்கும் அமைய நவபுரம் என மாற்றம் செய்யப்பட்டது. கிராம அபிவிருத்தி ச்சங்க முயற்சியால் 1981 இல் மாதிரிகிராம மாக நவபுரம் தெரிவுசெய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 50 குடும்பங்களுக்கு குடியிருப்பு காணிகள் வழங்கப்பட்டு பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய அரசியல் சூழலினால் இத்திட்டம் பூர்த்தியாகவில்லை.

கிராமத்தின் உள்ளக வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாது கற்பாறைகள் குண்டும் குளிகளாகவே இருந்தன. பொதுஅமைப்புகள் நலன் விரும்பிகளின் விடாமுயற்சியினால் பாறைகள் தகர்த்து பாதைகள் சீராக்கப்பட்டது. 1978 மார்கழி 30 இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் சுமார் 4 கிலோமீற்றர் தூரமுடைய மட்டுவில் - நவபுரம் இணைப்பு வீதி அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பெருந்தெருக்கள் திணைக்களம் இவ்வீதியில் இருபாலங்கள் நிர்மாணித்து பாதை பயன்பாட்டிற்கு உகந்ததாக்கப்பட்டது.

2006 நவபுரம் பொதுமண்டபம் கட்டி முடிக்கப்பட்டது.

நவபுரம் கிராமத்தில் அகழ்ந்து எடுக்கப்பட்ட கற்கள் சிற்பகலைஞர்களின் கரங்களினால் தெய்வ சிலைகளாக உருவாக்கி பல ஆலயங்களின் நிர்மாண, புனருத்தாரண திருப்பணிகளுக்கு பயன்பட்ட வரலாறு கொண்டது. பெருந்தெருக்கள், நிர்மாண வேலைகள் பலவற்றுக்கும் நவபுரம் கற்களே பயன்படுத்தப்பட்டன.

உதாரணம் - யாழ்.பண்ணைப்பாலம், தந்தை செல்வா நினைவு தூபி, கயிற்றசிட்டி கந்தசுவாமி ஆலயம் போன்றவற்றிற்கு நவபுரம் கற்கள் பயன்பட்டன. இதற்கான கற்களை சீர்செய்வதில் அமரர் சு.தம்பு தலையிலான தொழிலாளர்கள் மண்டம் அமைத்து செயற்பட்டனர்.

சைவமும், தமிழும் தம்மிரு கண்களாக கருதும் நவபுரம் மக்களின் ஆன்மிக தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் இங்கு ஒரு ஆலயம் அமைய வேண்டுமென மக்கள் விரும்பினர். சமுதாய சிந்தனையாளர் திரு ச.தங்கராசா அவரது நண்பர்கள் , உறவினர் சேர்ந்து 1978 ஆனி பூரணை நன்நாளில் ஆலயம் அமைவதற்கு கால்கோள் இட்டனர். கைதடி சைவச் சிறுவர் இல்ல நிர்வாகி ஆறுமுகம் கந்தையா அன்றைய தினம் ஆலயத்திற்கான முதற்கல் வைத்து வழிபாட்டினை ஆரம்பித்து வைத்தார். நவபுரம் துர்க்கை அம்மன் ஆலயம் என்ற பெருவிருட்சமாக இன்று திகழ்கிறது.

நவபுரம் நன்னீரை கொண்டிருப்பது இங்குள்ள மக்களுக்கு வரப்பிரசாதமாகும். குடிநீர் மற்றும் தேவைகளுக்கும் இந்நீர் பயன்படுத்தப்படுகிறது விவசாயம் மற்றும் தென்னை, மா, பலா , வாழை போன்ற பயன்தரு மரங்களும் நன்னீரினால் இங்கு செழித்து வளர்கின்றன. யுத்த நாட்களில் இங்குள்ள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் . வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர், கொல்லப்பட்டவர் பட்டியல் என இங்கும் நீள்கிறது நவபுரத்தின் தோற்றம் கிராமங்களில் ஓர் அத்தியாயம்.

**உசாத்துணைகள் -**
**நவபுரம் பொது மண்டப திறப்பு விழா மலர், 24.07.2016.**
**துர்க்கைஅம்மன் ஆலய கும்பாபிசேகம் ( 08.05.2011) சிறப்பு மலர் - உதயன்**




# TIMES IRON WORKS INC.

**Fabricators & Erectors**







## Our Services

Heavy Industrial
Light Industrial
Complex Commercial
Residential Structure
High Rise
Complex Bridges
Structural Steel Design
Structural Steel Fabrication
Structural Steel Erection
Miscellaneous Steel
Staircase and Railings
Steel Buildings Construction
on Site Welding
&
Material sale

## Proud Member

CWB CERTIFIED CSA W47.1
CISC

38 Gormley Industrial Avenue, Stouffville, ON, L0H 1G0.

**Tel: 905-888-9696 / Fax: 905-888-9698**

Cell: 416-817-1114 / thass@timesironworks.com / www.timesironworks.com



எம்மவர் மத்தியில் முதல் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இரும்பு சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்கக்கூடிய STEEL நிறுவனம் TIMES IRON WORKS INC. இவ் நிறுவனம் STRUCTURAL STEEL MISCELLANEOUS STEEL மற்றும் METAL ROOF DECK ஆகிய சேவைகளை ஒரே கூரையின் கீழ்க்கொண்டு பலதரப்பட்ட நிறுவன கட்டுமானப் பணிகளை கீழே குறிப்பிட்டபடி செவ்வனே ஆற்றிவருகிறது.

- LIGHT AND HEAVY INDUSTRIAL BUILDINGS
- COMMERCIAL COMPLEX
- RESIDENTIAL/CUSTOM BUILT HOMES
- CITY OF TORONTO BUILDINGS
- RECREATION CENTRES, ICE HOCKEY ARENAS
- TORONTO TRANSIT COMMISION-TTC,
- GO STATION
- LCBO, CONVENIENCE STORE

- LIGHT AND HEAVY INDUSTRIAL BUILDINGS
- COMMERCIAL COMPLEX
- RESIDENTIAL/CUSTOM BUILT HOMES
- CITY OF TORONTO BUILDINGS
- RECREATION CENTRES, ICE HOCKEY ARENAS
- TORONTO TRANSIT COMMISION-TTC,
- GO STATION
- LCBO, CONVENIENCE STORE

Times Metals Sales

TIMES METAL SALES LTD. என்னும் நிறுவனம் அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான இரும்புச்சட்டங்கள் (COLOUMNS - HSS TUBE, BEAMS, “C” CHANNEL, ANGLE IRON) மற்றும் பலதரப்பட்ட இரும்புப் பாகங்கள் S(LINTELS, PLATES, FLAT BARS, THREADED RODS, REBARS) மற்றும் METAL ROOF DECK அனைத்தையும் ஒரே இடத்தில் வாங்கக்கூடிய நிறுவனமாகத் திகழ்கின்றது.

**Mr. THASS SHAN**
(PRESIDENT & CEO)

Tel : 905-888-9696 / Fax : 905-888-9698 Email : thass@timesironworks.com / info@timesmetalssales.com
Website : www.timesironworks.com / www.timesmetalssales.com